Quality Japanese Car Parts
Japarts
Discount Prices
08450 66 44 22
www.japarts.co.uk

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

Diamond Palace
Mithus Jewellery
Tooting 020 87675333 76 High Street SW17
Croydon 02086831756 322 London Road

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN 52 Oct / Nov 2006
For News: 020 8279 0354

# Whipps Cross பல்கலைக்கழக மருத்தவமனை கைவிடப்படும் அபாயம்!

## ஆயிரக்கணக்கான வோல்தம்ஸ்ரோ தமிழர்களும் பாதிக்கப்படுவர்.




குவை கழச குரவரசந என்ற திட்டத்தின் மூலம் வடக்கு - கிழக்கு லண்டனில் உள்ள மருத்துவமனைகளை குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு என வகைப்படுத்தும் திட்டத்தை அரசு கொண்டுவரவுள்ளது. அதற்கு பொது மக்கள், மருத்துவப் பணியில் உள்ளவர்கள் மற்றும் சுகாதாரசேவைகளுடன் தொடர்படைய நிறுவனங்களுடனான ஆலோசணைகள் இடம்பெற்று வருகிறது. விப்ஸ் குறொஸ் மருத்தவமனையின் எதிர்காலம் 5 வகைகளில் ஒன்றினுள் அடக்கப்பட வேண்டும் என Fit for Future திட்டம் தெரிவிக்கிறது. அதில் இரு வகைகளே பெரும்பாலும் தற்போதுள்ள நிலையிலெயே மருத்துவமனையை தொடர்ந்தும் இயங்கச் செய்ய உதவுகிறது. கலந்தாலோசனைகளின் முடிவு எப்படி இருந்தாலும் இறுதி முடிவை சுகாதார சேவைகள் அமைச்சுச் செயலாளர் பற்றீசியா ஹீவெயிற்றே எடுப்பார்.

தற்போது விப்ஸ் குறொஸ் வழங்கி வரும் சேவைகளை குறைத்து அதனை குறிப்பிட்ட ஒரு துறைக்கும் ஏனைய பொது மருத்துவ சேவைக்குமான மருத்துவமனையாக்குவதே Fit for Future இன் திட்டம். இதன் மூலம் றொம்பேட்டில் உருவாகும் நவீனமயப்படுத்தப்பட்ட குயின்ஸ் மருத்துவமனையே இப்பகுதிகளுக்கு பொதுவானதாக இயங்க ஆரம்பிக்கும்.

வடக்கு - கிழக்கு லண்டனில் உயர் தரத்தில் உள்ள விப்ஸ் குறொஸ் மருத்துவமனை 27 மில்லியன் கடன்பழுவைக் கொண்டுள்ளது. தேசிய சுகாதார சேவைக்கு NHS ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவே அரசு Fit for Future என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் விப்ஸ் குறொஸில் இப்போது கிடைக்கும் சேவைகள் வேறு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு விபஸ் குறொஸ் தரமிறக்கப்படும்.

லண்டனில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் வோல்தம்ஸ்ரொவும் ஒன்று. இம்மருத்துவமனையின் சேவைகள் குறைக்கப்படுவது இப்பகுதித் தமிழர்களை மிகவும் பாதிக்கும். இம்மருத்துவமனையை தொடர்ந்தும் அப்படீயே பேணுவதற்கான போராட்டத்தில் தமிழர்களும் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். இன்னும் சில வாரங்களில் முடிவகள் எடுக்கப்படவுள்ளது. உங்கள் குரல்களை ஓங்கி ஒலியுங்கள்.

334-340 Romford Rd
Forest Gate London E7 8BS
F. 0208 555 2 116
dial4parts@hotmail.co.uk
DIAL 4 PARTS
Service With Satisfaction
SPECIAL OPENING OFFERS
On Japanese, Korean, European Parts
Full workshop facility
T. 0208 555 2 111

TRADE CASH & CARRY
MAKBROS
RICE, ETHNIC, BEERS, WINES, SOFT DRINKS, CRISPS, CHOCOLATES
SPECIALS
WE ARE HERE FOR YOUR CONVENIENCE
UNIT 8, DALSTON GARDENS, STANMORE, MIDDX, HA7 1BU.
TEL: 0208 204 0533
FAX: 0208 204 0633
Nisa Today's

Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

KV Builders & Contractors
Loft Conversion
Rear & Side Extention
Roofing
FREE Estimate
25 Years Experience.
100% Guaranteed Work
Special Offer: 3 bedroom replacement roof, Tiling for £ 1700 only
Call Kulveer:
020 8570 7152
07932 500 777

V.J.CARPETS
110 The Green, Southall Middlesex, UB2 4BQ
Tel: 020 8574 9033
SPECIALOFFERS
FREE UNDERLAY WORTH £3.57 SQ.MTR
WITH CARPETS OVER 5.96 S.Q. MTR
WE ARE NOW OFFERING FREE FITTING, FREE MEASURING FREE ESTIMATING & FREE LOCAL DELIVERY

RIGHT PRICE
TRADE CASH & CARRY
(((( Many Opening Offers ))))
UNIT 8 WHITBY AVENUE PARK ROYAL INDUSTRIAL ESTATE LONDON NW10 7SF
CHOCOLATES, DRINKS, BEER, RIZLA, STATIONERY, TOILETERIES, TOYS
TEL:020 3188 3005 FAX:020 3188 3006

To Advertise: 07957681944

Starline
புதிய இணைப்பைப் பெறுவதற்கோ
கைத்தொலைபேசி உதிரிப்பாகங்களுக்கோ
நவீனமயமாக்கவோ
அல்லது எந்த விதமான பழுதுகளையும் திருத்தி சரிசெய்யவும்
சகல பிரச்சனைகளையும் தமிழில் பேசி சரிசெய்து கொள்ள நீங்கள் தாராளமாகக் குமாரை அணுகுங்கள்.
15 Years established
T. 0208 606 8888
235 The Broadway Southall UB1 1ND

SALOM FOOD PRODUCTS SFP
For best quality food products
Agents & distributes requires
இலங்கை இந்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான உணவுப்பொருட்களை மலிவாக பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்
SALOM FOOD PRODUCTS
Call US: 0208 9089292 - 078 3222 0687

A1 Auto Centres
TYRES ALLOYS EXHAUSTS SHOCKS BATTERIES BRAKES SERVICING
State of the art 4 wheel electronic alignment
Aloy Wheels
Brake Pads
Come in for a winter check
Best Deal in Town
Powerflow Stainess Steel exhaust system for any car
Next to Morrisons 0208 204 6868
Bowman Trading Estate, West Morland Rd, NW9

R&J HEATING & PLUMBING TRADE LTD
BRISTAN ARMITAGE HERITAGE AQUALISA
Complete Bath Suite £199* Only
(Includes WC, Basin&Pedestal, Steel Bath, Mixer Taps, Bath Waste)
Many Other Special Offers In-store
Call us on 0208 538 7722
Address:
Unit 3, Derby Road Ind Estate
Derby Road, Hounslow
Middx, TW3 3UH
Tel: 0208 538 7722 / Fax: 0208 538 7733
* Price Includes VAT

பிரித்தானியத் தமிழர்களின் செய்திப் பத்திரிகை

**உதயன்**

உண்மை ! நடுநிலமை ! மக்கள் நலன் !

1997 முதல் அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்டு வெளிவரும் தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை.

தொடர்புகளுக்கு : UDHAYAN P O Box 35806 London, E11 3JX, UK Tel : 020 8279 0354

ஆசிரியர் குழு:
தலைமை நிருபர்: த ஜெயபாலன்
செய்தி ஆய்வு: ரி கொன்ஸ்ரன்ரைன்
விளம்பரப் பொறுப்பாளர்: த புஸ்பலிங்கம்

நிருபர்கள்:
கே அரவிந்தன் (இலண்டன்)
பொன் சிவகுமார் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கே பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

உதயன் பத்திரிகை GNM(PVT) LTD இனால் மாதாந்தம் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் உதயன் பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல்மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# இலங்கையில் பிறந்தவர் அமெரிக்காவில் மோசடி:

12 ஆண்டுகள் சிறையும் 4 மில்லியன் பவுண் அபராதமும்

அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனமான ஊழஅிரவநச யுளளழஉயைவநள இன் முன்னாள் தலைவருக்கு கணக்கு மோசடியில் ஈடுபட்டமைக்காக 12 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 4 மில்லியன் பவண் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 2ல் இவருக்கு இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. இலங்கையில் பிறந்து தனது வாலிபப் பருவம் வரை அங்கு வாழ்ந்த சஞ்சேய் குமார் கடந்த ஏப்ரலில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

2000 - 2001 நிதிஆண்டுக்கான கணக்கியல் பதிவுகளை மோசடி செய்து வருமானத்தை அதிகரித்து காட்டியதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டது. இந்நிதியாண்டில் 1.1 பில்லியன் பவுண்களை தவறான முறையில் பதிவு செய்தது கண்டு பிடிக்கப்பட்டது. இவர் மீதான விசாரணைகளை அரசாங்கம் ஆரம்பித்தவுடன் சஞ்சய் குமார் தனது லப்ரொப்பில் இருந்த பதிவகளை முற்றாக அழித்து விட்டதன் மூலம் நீதிக்குத் தடையாய் இருந்ததையும் ஒப்புக் கொண்டார்.

1976ல் அமெரிக்காவிற்கு தனது குடும்பத்துடன் புலம்பெயர்ந்த சஞ்சய் குமார் தனது சிறைத் தண்டனையை அரம்பித்துள்ளார்.

Report by JB



# இனச் சட்டங்கள் மீளாயப்பட வேண்டும் கோடன் பிறவுன்.

இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு இன உறவை சீரழிக்க முயன்ற இரு தீவிர வலதசாரித் தலைவர்கள் இருவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து இனச்சட்டங்களை மிளாய்வு செய்ய வேண்டும் என கோடன் பிறவுண் தெரிவித்துள்ளார். அடுத்த பிரித்தானியப் பிரதமராக தயாராகி வரும் பிறவுண், மத, இன துவேசம் பெரும்பான்மையானோரை பாதிப்பதாகவும்; பெரும்பாலானவர்கள் நிக் கிறிபினின் வார்த்தைகளால் புண்படுவதாகவும் தெரிவித்தார்.

தீவிர வலதுசாரிக் கட்சியான BNP தலைவர் நிக்கிரிபினும் அக்கட்சியின் ஊடகப் பொறுப்பாளர் மார்க் கொலற்ம் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் இனவாதக் கருத்துக்களை வெளியிட்னர் என பிபிசி புலனாய்வு நிருபர் குற்றச்சாட்டி இருந்தார். அதனடிப்படையில் தொடரப்பட்ட இவ்வழக்கில் 12 வெள்ளையின யூரிகளும் நிக்கிரிபினை குற்றமற்றவராக விடுதலை செய்தனர்.

News Report

# சோசலிசம் நோக்கிய மாநாட்டில் 'இலங்கையில் சமாதானம் சாத்தியமா' உரை:

இலங்கையில் சமாதானம் சாத்தியமா என்ற தலைப்பிலான உரை சோசலிசம் நோக்கிய மாநாட்டில் இடம்பெற்றள்ளது. ஊர்வலம் மற்றும் சோசலிச முகாமின் தலைவர்களின் உரையும் இதில் இடம்பெறவுள்ளது. ரொட்ஸ்கியவாதிகளால் ஒழுங்கு செய்யப்படும் இந்நிகழ்வு நவம்பர் 25, 26 திகதிகளில் நடைபெறகிறது.

பிரித்தானியாவை பாதிக்கும் பிரச்சினைகளில் இருந்து வெனிசுவெலா, சிலி, பொலிவியா, பிரான்ஸ், மற்றும் கிரீஸ் நாடுகளில் காணப்படும் பிரச்சினைகள் பற்றியும் இங்கு விவாதிக்கப்பட உள்ளது.

**BNP** எப்படி வெற்றிகொள்வது, பிரித்தானியப் பெண்கள் சமத்துவம் பெற்றுவிட்டார்களா, உலகின் அதிசக்தி வாய்ந்த நாடாக இருக்கும் அமெரிக்காவை சீனா மாற்றீடு செய்யுமா, தென் அமெரிக்க புரட்சி, யார் ஊடகங்களை கட்டப்படுத்துகிறார்கள் எனப் பல்வேற தலைப்புகளில் விவாதங்கள் இடம்பெறவுள்ளது.

www.ratnamarble.co.uk
RMGL
RATNA MARBLES AND GRANITE LTD
Importers of Marble, Granite, Lime stone, Sand stone, Kitchen worktops, Vanity tops & Bathrooms
RATNA MARBLE & GRANITES LTD
Office 2, 15 Main Drive, East Lane Business Park, Wembley - HA9 7NA
Tel - Fax : 0208 904 3441
Mob : 07900 457 139



KERALA AYURVEDA
In its purest form now at Southall and Wembley
Are you suffering from any ofthe following Chronic/ Acute Disease?
ARTHRITIS, PSORIASIS, SPONDYLITIS, MIGRAINE, FROZEN SHOULDER, STRESS&STRAIN, SLIP DISC, PILES, RHEUMATISM, OBESITY, MUSCLE PAINS, SINUSITIS, JOINT PAINS, ECZEMA, DEPRESSION, INSOMNIA
Kerala's age-old Ayurvedic Panchakarma treatments are veryeffective fortreating such diseases. We have established an Ayurvedic Centre in Kerala's traditionalway at the following address to undertake these treatments forthe suffering people at London and are manned by well-qualified & experienced Ayurvedic Doctors and Ayurvedic Panchkarma technicians from Kerala, India.
NACS Kerala Ayurveda
Also we provide Ayurvedic Health Rejuvenation treatments through traditional medicated oil massages, steam bath etcc and beauty therapies using herbal mixtures.
CALL FOR APPOINTMENT AND FREE CONSULTATION
8 Grand Parade, Forty Ave, Wembley
Tel: 020 8908 4666 07866 687 216
CALL FOR APPOINTMENT AND FREE CONSULTATION
60 King St, Southall, MiddlesexUB2 4DB
Tel: 020 8571 9111 07958 539658
Website: KeralaAyurveda.co.uk/santhigramAyurveda.com Email: nacsayurveda@lycos.co.uy



Balbir Sudera
Niraj's Jewellers Ltd.
Claims/Appraiser/Assessor Advisor/jeweller
136 Uxbridge Road, Hays, Middlesex, London UB2 OJH
Tel: 020 8573 9223 Fax: 020 8573 0875
Mobile: 07985 416 633

TCS TUTORIAL COLLEGE
GSCE - A-LEVEL - NVQ
Saturday school - English - ESOL - EFL
Language Classes - Foundation Degrees
Short courses - Retakes
Monday - Saturday 9,00am-7,00pm
GUARANTEED RESULTS
Fitzgerald House Willowcourt Avenue Kenton Harrow Middx. HA3 8ES
A Department for Educationand Skills (DfES) registered school
Tel: 0208 909 1432

# பா உ ரவிராஜ் கொலைக்கு மனித உரிமை அமைப்புகள் கண்டனம்.



தமிழ் தேசியக் கூட்டமைப்ப பா உம் சட்டத்தரணியுமான நடராஜா ரவிராஜ் கொல்லப்பட்டமைக்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்து உள்ளது. நவம்பர் 10 அன்று பா உ ரவிராஜம் அவரது மெய்ப்பாதுகாவலர் லொக்கவல லக்ஸ்மன் என்பவரும் பொலிஸ் சீருடையில் வந்த துப்பாக்கி தாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பா உக்களில் தீவிரமாகச் செயற்படுபவரும் ஓரளவு வெள்ப்படையாக கருத்துக்களை வெளிப்படுத்துபவருமான ரவிராஜ் அண்மையில் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களக்கு எதிரான அமைப்பின் தலைவராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது கொலை தொடர்பாக தமிழர் தகவல் நடுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பாதுகாப்பு அவசியம் எனத் தேவைப்படும் பா உக்களக்கு இலங்கை அரசாங்கம் உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டக் கொள்ளப்பட்டுள்ளது.

ரவிராஜ் லண்டன் வந்திருந்தபோது எமது நிருபருக்கு வழங்கிய பேட்டியில் நிம்மதியான சூழலில் நாங்கள் வாழ்வோம் என்ற நம்பிக்கைகை இழந்தவிட்டது என்று தெரிவித்தார். மனித உரிமை மீறல்கள் பற்றிக் கேட்ட போது எங்களுடைய பங்களிப்பு ஒன்றமே இருக்க முடியாது. கண்டனங்களை நாங்கள் தெரிவித்திருந்தாலும் எங்களையே பதம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தெரிவித்திருந்தார்.

To Advertise: 07957681944

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards

Promet Technology Ltd.
Architectural and Structural Steelwork
Call us on:
020 8965 0500
or Fax:
020 8965 3030

MIDDX TYRES LTD
NEW, PART WORN & REMOULDS MOT PREPERATIONS, STEERING
020 8813 91 54 / 84
EXHAUSTS, WHEELS, SUSPENSION, 4 WHEEL ALIGNMENTS, BRAKES
41 - 43 The Green, Southall, Middx
WWW.MIDDXTYRESLTD.COM



skylord travel
Skylord Travel Special Offers
Bangalore from £325 Bombay from £265 Chennai from £325
Calcutta from £365 Colombo from £380 Delhi from £265
Hyderabad from £370 Trivandrum from £325 Above Fares are nett exclude taxes & Fuel Surcharges
Eastcote : 020 8582 1111 London : 020 7388 8111 Southall : 020 8537 1111

Hyundai's opened London... ...What a wise choice



HYUNDAI
HYUNDAI LONDON 020 8457 6660 Edgware Road, London, NW9 7BN www.hyundai.co.uk/HyundaiLondon

# கழிவுகளை எறியும் போதே கட்டணம் எறியும் கழிவுகளை எடைபோடும் உரட்டும் குப்பை தாங்கிகள்

நாங்கள் எறியும் குப்பைகளை எடை போடும் சிப்ஸ் உருட்டும் குப்பை தாங்கிகளில் பொருத்தப்பட உள்ளது அல்லது ஏற்கனவே அச் சிப்ஸ் பொருத்தப்பட்ட குப்பைத் தாங்கிகளை உள்ளாட்சி சபைகள் வழங்க உள்ளன. இன்னும் மூன்று ஆண்டுகளில் 2010ல் 40 வீதமான கழிவுகளை மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்த வேண்டும் என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிக்கமைய கவுன்சில்கள் தங்கள் பகுதிகளில் அவ்வாறு செய்யப்படுகிறதா என்பதை அளவிடவே இதனை ஆரம்பித்துள்ளார்கள். 40 வீதமான கழிவுகள் மீள்பாவனைக்கு உட்படுத்தப்படாவிட்டால் கடுமையான அபராதத்தை ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும்.

மேலும் கவுன்சில் வரியை குறைத்து கழிவுகளை கையாள்வதற்கு தனியாக கட்டணம் அறவிடவும் திட்டமிடப்படுகிறது. கட்டணம் அறவிடப்படும் போது வெளியேற்றும் கழிவின் எடைக்கு ஏற்ப கட்டணம் வசூலிக்கப்படும்.

# வெளிநாட்டு தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

வெளிநாடுகளில் இருந்து பிரித்தானியாவில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 5 வீததத்தால் 1.5 மில்லயனாக அதிகரித்து உள்ளதென ஒக்ரோபர் 5ல் தேசிய புள்ளிவிபர அலுவலகம் தெரிவிக்கிறது. இப்புதிய தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் போலந்தில் இருந்தும் அதனை அடுத்து லித்துவேனியா ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் இருந்தும் வந்துள்ளனர். 2005ம் ஆண்டே அதிக அளவு வெளிநாட்டுத் தொழிலாளர்கள் பிரித்தானியாவுக்குள் வந்த ஆண்டாக உள்ளது.

2004ல் 8 நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்ததை அடுத்து 195,000 பிரஜைகளக்கு வேலை அனுமதி வழங்கப்பட்டது. இவர்கள் பல்வேறு தொழில் மட்டங்களிலும் பணியாற்றுகின்றனர். இவர்களின் வருகை வேலைச் சந்தைக்கான போட்டியை மேலும் அதிகரித்து உள்ளது.

# இவ்வாண்டின் சிறப்புத் திருமணம்

பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்திய ஹிந்துஜா சகோதரர்களின் வீட்டுத் திருமணம் மும்பாயில் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது. ஸ்ரீசந், கோபிசந், பிரகாஸ், அசோக் என்ற இந்த ஹிந்துஜா சகோதரர்களில் பிரகாஸின் இளைய மகள் ரேனுகா சுவிஸ் சட்டத்தரணி ஒலிவர் கவன்டினியை மணம் முடித்தார். செப்ரம்பர் முடிவில் இடம்பெற்ற இத்திருமண வைபவத்தில் உலகின் வெவ்வெறு பாகங்களில் இருந்தும் அரசியல்வாதிகள், தொழில் அதிபர்கள், திரை நட்சத்திரங்கள் என 15,000க்கம் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீசந் கோபிசந் சகோதரர்கள் பிரித்தானியாவில் வாழ்ந்த போதும் பிரித்தானியாவில் உள்ள அரசியல் புள்ளிகள் யாரும் கலந்துகொள்ளவில்லை. ஹிந்துஜா சகோதரர்கள் அரசியல் நண்பர்களைப் பயன்படுத்தி பணம் கொடுத்து பாஸ்போட் பெற முயற்சித்தது அம்பலமானதைத் தொடர்ந்து இச்சகோதரர்களும் இவர்களின் நண்பர்களான பீற்ற மண்டல்சன், கெயிச் வாஸ் போன்ற பிரித்தானிய அரசியல் புள்ளிகளும் தங்களது தொடர்புகளை அடக்கியே வாசிக்கின்றனர். மேலும் ஸ்ரீசந், கோபிசந், பிரகாஸ் மூவரும் இந்தியாவில் நீண்டகாலம் புகைத்திருந்த போபர்ஸ் ஊழலில் சிக்கி இருந்தது தெரிந்ததே. கடந்த ஆண்டு இவ்வழக்கு கைவிடப்பட்டது.

# புலம்பெயர் சினிமா

வின்சன் மனுவற்பிள்ளையின் 'ஒரு இதயத்திலே' சினிமா நவம்பர் 15ல் திரையிடப்பட்டது சிறப்பு விருந்தினர்களுக்காக திரையிடப்பட்டது. இப்படத்தின் நடிகர்கள், நடிகைகள் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக இச்சிறப்புக் காட்சி இடம்பெற்றது. படத்தின் இறுதியில் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இப்படம் ஜனவரி 6 மற்றும் 12ம் திகதிகளில் பொதுமக்களுக்காக காண்பிக்கப்பட உள்ளது.

# மகா உத்தமனுக்கு சுவிஸ் நண்பர்கள் அஞ்சலி!

தமிழ்த் தேசிய விடுதலையின் ஆயுதப் போராட்ட ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் புரட்சிகர சிந்தனையாளருமான 'மாஉ' என்றழைக்கப்படும் மகாலிங்கம் உத்தமன் அவர்கள் 30.10.2006 அன்று காலமானார்.

தமிழ் மக்களாகிய நம்மில் பலரும் அறிந்திராத மனிதர் இவர். ஆனாலும் போராட்ட வரலாற்றிலிருந்து அகற்றப்பட முடியாதவர். மறக்கமுடியாதவர். உரும்பிராயை பிறப்பிடமாகக் கொண்ட மகா உத்தமன் அந்த மண்ணின் மைந்தர்களான பொன். சிவகுமாரன் சத்தியசீலன் போன்றவர்களுடன் இணைந்து 'தமிழ் மாணவர் பேரவை' அமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர். தமிழர்களுக்கென தனியரசு தேவை என்பதை வலியுறுத்தியதோடு அதற்கான ஆயுதப் போராட்டத்துக்கும் தமிழ்மாணவர் பேரவை அறைகூவல் விடுத்ததோடு செயலிலும் இறங்கியது. இதன் அடுத்து வந்த செயல்பாடுகளில் சிவகுமாரன், அரச படைகளிடம் சிக்காமல் தற்கொலை செய்துகொள்ளவும் ஏனையவர்கள் தலைமறைவாகவும் அந்த அமைப்பு தேக்கத்திற்குள்ளானது.

சென்ஜோன் கல்லூரி மாணவனான உத்தமன் கல்விகற்பதற்காக லண்டன் பயணமானார். கல்விகற்பதற்காக லண்டன் சென்ற உத்தமனின் அரசியல் வாழ்வு இன்னும் தீவிரமடைந்தது. அவரது உலகப் பார்வையும் சிந்தனையும் விசாலமடைந்தது. சர்வதேச முற்போக்கு புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதுடன் அவற்றின் போராட்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்டார். இவற்றின் பலாபலன்களை ஈழ விடுதலைப் போரட்டத்தில் சுவறச்செய்தார். இவர் ஊட்டிவளர்த்த விடுதலை இயக்கம் (புளொட்) சீரழிவுக்குள்ளான போது அதிலிருந்து வெளியேறிய புரட்சிகர சக்திகளுடன் (தீப்பொறிக் குழுவுடன்) கைகோர்த்துக் கொண்டதோடு, தமிழீழ மக்கள் கட்சியினை உருவாக்குவதிலும் அதனை வளர்த்தெடுப்பதிலும் உந்து சக்தியாக விளங்கினார்.

சமூக விஞ்ஞானத்துறையில் கற்றுத்தேர்ந்தவரான தோழர் உத்தமன் தத்துவ கோட்பாட்டுத் துறையிலும் பெரும் பங்களிப்பை வழங்கியவராவார். தமிழ்த் தேசியம் குறித்த கோட்பாட்டு விவாதங்களில் பின்புலமாக விளங்கியதோடு முரண்பட்டு நின்ற பலரையும் அதன்பால் வென்றெடுத்தார். உயிர்ப்பு கோட்பாட்டு சஞ்சிகையில் உத்தமனின் பங்களிப்பு மிக முக்கியமானதொன்றாகும். ஈழப்போரட்டம் ஈடாட்டம் கண்ட வேளையில் அதனை கருத்துரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் தூக்கி நிறுத்தவதில் சளைக்காமல் செயல்பட்டார். புரட்சிகர அமைப்பின்றேல் புரட்சியில்லை என்பதற்கேற்ப அமைப்பு உருவாக்கத்தில் காலத்தைச் செலவு செய்தார். உத்தமன் கோட்பாட்டு ரீதியில் தனது எழுத்தியக்கத்தை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் இருந்தும் அவர் அதை நூல்வடிவில் மேற்கொள்ளவில்லை. அமைப்புச் செயற்பாட்டினுள் அவர் கவனம் செலுத்தினார். இருப்பினும் அவர் எழுதிய 'சார்புநிலைப் பொருளாதாரம்' எனும் நூல் அவரது தத்துவ ஆளுமைக்குச் சான்று பகரும்.

"அதிகாரம் புகழ் குடும்பம் மற்றும் வசதி ஆகிய அனைத்தையும் கொண்ட ஒரு மனிதர் எந்தவித கோபமோ தயக்கமோ இன்றி ஒரு இலட்சியத்துக்காக அனைத்தையும் துறக்கத் தயாரக இருக்கும் மனோநிலை அசாதாரணமானது." ஆனாலும் இப்படிச் சொல்வது அவருக்குப் பிடிக்காது என்பது அவருடன் பழகியவர்களுக்குத் தெரியும். புரட்சிகர போராட்டவாழ்வில் அவருடன் பயணித்த சக பயணிகள் இடையில் இறங்கிச் சென்றபோதும் அவரது பயணம் மட்டும் நிற்கவில்லை. சலிக்காமல் - உடல் தளர்சியடைந்த போதும் - தொடர்சியாக பயணம் செய்ய வேண்டும் என்ற அவரது அவா தனது முன்னாள் சகபயணி சிவகுமாரனை நினைத்துக் கொண்டு மண்ணுக்கு சென்றபோது அங்கேயே முற்றுப்பெறுமென யார் கண்டது.

"ஒரு கலைஞனுக்குரிய கவனத்துடன் நான் உரமேற்றியருக்கும் என் மன வலிமை என்னுடைய பலவீனமான கால்களையும் களைத்துப்போன நுரையீரலையும் சுமந்து செல்லும்." - சே குவேரா

இந்தப் போராளிக்கு எமது அஞ்சலிகள் !

- சுவிஸ் நண்பர்கள் -

# ஏ ஜே நினைவுக் கூட்டம்

சிறந்த எழுத்தாளர், கல்வியியலாளர், ஊடகவியலாளர், மொழிபெயர்ப்பாளர் ஆன ஏ ஜேயின் நினைவுக் கூட்டம் நவம்பர் 18ல் வோல்தம்ஸ்ரோ வைஎம்சிஏ இல் நிகழவுள்ளது. விம்பம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. ஏ ஜே என அன்புடன் அழைக்கப்பட்ட ஏ ஜே கனகரட்னாவின் ஒக்ரோபர் 10ல் காலமானார். உலக இலக்கியங்களை ஒரு சேர பல்கலைக்கழக மாணவர்கள், சமூக சேவகர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், இராணுவ இயக்கங்கள் என பல்வேறு தரப்பினரிடமும் கொண்டு வருவதற்கு உழைத்த இவர் தனது 72வது வயதில் காலமானார்.

லண்டனில் நடைபெறவுள்ள அஞ்சலிக் கூட்டத்தில் நா சபேசன், மாதவி சிவலீலன், யமுனா ராஜேந்திரன், மாலி, நிர்மலா ராஜசிங்கம், மு புஸ்பராஜன், மு நித்தியானந்தன், இ பத்மநாப ஐயர் ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

# புலம்பெயர் தமிழ் சமூகத்தை உலுக்கும் சமூகப் பிரச்சினை ஒரே நாளில் இரு கொலைகளும் இரு தற்கொலைகளும்

ஒரே நாளில் இரு கொலைகளும் இரு தற்கொலைகளும் ரொறன்ரோவில் நவம்பர் 5ல் இடம்பெற்றுள்ளது. மறுநாள் திருமணம் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டின் கராஜ்ஜில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தார். கொல்லப்பட்டவர் கனடாவில் தமிழர்கள் அதிகமாக வாழும் மற்றுமொரு பகுதியான மார்க்கம் பகுதியைச் சேர்ந்த தயாளினி சுகிர்தராஜ் (31) என அடையாளம் காணப்பட்டு உள்ளார். மூன்று பிள்ளைகளின் தாயான தயாளினியின் கொலை தொடர்பாக அவரது கணவரான சுகிர்தன்ராஜ் கைலாசப்பிள்ளை (39) சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். இக்கொலைக்கான காரணத்தை பொலிசார் வெளியிடவில்லை.

மற்றொரு சம்பவத்தில் கணவன் தனது மனைவியையும் மூத்த மகளையும் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார். தனது மனைவி மாலினி தயாகுமார் (36), மூத்த மகள் நிருஜா தயாகுமார் (14) ஆகிய இருவரையும் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்ட துயரசம்பவம் ரொறன்ரோவில் தமிழ் மக்கள் செறிந்துவாழும் ஸ்காபிரோவில் இடம்பெற்றுள்ளது. மூன்று பெண் குழந்தைகளின் தந்தையான கதிரவேலு தயாகுமார் (39) என்பவரே இவ்வாறு பயங்கரமாக நடந்து தன்னையும் அழித்துக் கொண்டுள்ளார். இவர் ஏற்கனவே வன்முறையில் ஈடுபட்டவர் என்றும் மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தவர் என்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர். பிரேத பரிசோதணைகளின் படி மாலினி கழுத்தில் ஏற்பட்ட வெட்டுக் காயத்தினால் கொல்லப்பட்டுள்ளார். மகள் நிருஜா கழுத்தில் ஏற்பட்ட அழுத்தத்தால் கொல்லப்பட்டுள்ளார்.

தாயும் மகளும் அவர்களது Wakunda Palace ல் உள்ள வீட்டில் வைத்தே கொல்லப்பட்டுள்ளனர். நவம்பர் 5 அதிகாலை 3:30 மணிக்கு இந்த பயங்கரம் நிகழ்ந்துள்ளது. கொலைகளை நிறைவேற்றி விட்டு அங்கிருந்து தனது மனைவியின் குடும்பத்தினர் வாழும் Sunrise Ave ல் உள்ள 9ம் மாடிக்குச் சென்று பொலிஸிற்கு தனது மனைவியையும் மகளையும் கொலை செய்த விடயத்தை அமைதியாக பொலிசிற்குத் தெரிவித்து தனது உயிரை தான் மாய்த்துக் கொள்ளப் போவதையும் பொலிசாருக்குத் தெரிவித்தார்.

இறந்த தம்பதிகளின் 12, 9 வயதகளையுடைய இரு இளைய சகோதரிகளும் பாதிப்பின்றி அவர்களுடைய நெருங்கிய உறவுகளுடன் பாதுகாப்பாக உள்ளனர். கொல்லப்பட்ட மாலினி தயாகுமார் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்றும் கனடாவில் கடந்த 15 ஆண்டுகளாக வாழ்ந்து வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சிங்கப்பூர் தேசிய நூலகத்தில் புகலிட நூல்கள்

அண்மைக்காலமாக சிங்கப்பூர் தேசிய நூலகத்தில் உலக நாடுகளிலிருந்து தமிழ் நூல்கள் சேகரிக்கும் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஐரோப்பியத் தமிழ் நூல் படைப்பாளிகள் தமது நூல்கள் தெற்காசிய நாடுகளை எட்ட இது வழிசெய்கின்றது.

இன்றைய புகலிடப் படைப்பாளிகளிடையே சுதந்திரமான தொடர்பூடகங்கள் எதுவும் இயங்கவில்லை என்பது கவலை தரும் செய்தியாகும். உலகின் பல நாடுகளிலும் பரவி வாழும் ஈழத்துப் படைப்பாளிகள் தங்களுக்கிடையே சங்கங்கள் அமைத்துச் செயற்பட்டாலும் அங்கே அறிவார்த்தமான தகவல் பரிவர்த்தனை மேற்கொள்ள ஊடகங்கள் எதுவுமே இல்லை. இதனால், புகலிடத்தில் உருவாகும் எமது படைப்புகளை உலகின் மற்றைய பாகங்களிலுள்ள தமிழ் படைப்பாளிகள் அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. அந்த வகையில் சிங்கப்பூர் தேசிய நூலகம் எடுத்துள்ள முயற்சி வரவேற்கத்தக்கது.

தமது நூல்களை சிங்கப்பூர் தேசிய நூலகத்தில் சேகரித்துப் பேணிப் பாதுகாக்க விரும்பும் எவரும் திருமதி புஷ்பலதா நாயுடுவுடன் தொடர்பு கொள்ளலாம். இவர் ஒரு ஈழத்துப் பெண்மணி. சிங்கப்பூரில் நீண்டகாலத்துக்கு முன்னர் குடியேறியவர். சிங்கப்பூர் தேசிய நூலகத்தின் உயர் அதிகாரியாகப் பணியாற்றுகின்றார். இவரது தொடர்பினைப் பேணுவதன் மூலம் எமது நூல்கள் தெற்காசிய நாட்டவரின் பார்வைக்கு எட்ட வழிகோலலாம். Senior Executive/ Heritage and Asia, National Library Board, 100 Victoria Street # 14-01, Singapore 188064. தொலைபேசி இலக்கம்: 02-63323133 அல்லது 02-63323611. Pushpa_NAIDU@nlb.gov.sg

For All Your Toyota Motoring Needs

£250 OFF any vehicle purchased at Jemca Toyota before 31st March 2007

Voucher discount applies to screen price.
Voucher must be produced at time of interest.



Not to be used in conjunction with any other offer

JEMCA TOYOTA
The Hyde,
Edgware Road,
London NW9 6BH
020 8203 1888

TYRE CHECK & AUTO SPARES - ACCESSORIES
(BRITISH & FOREIGN CARS)
NEW & PART WORN TYRES / BATTERIES
WHEEL BALANCING / EXHAUST
WHEEL ALIGNMENT / BRAKES
NEW & SECOND HAND RIMS / SERVICE
SHOCK ABSORBERS / MOT WORK
OPEN SEVEN DAYS A WEEK
MON-SAT 8.30AM TO 7PM - SUN 9.00AM TO 6.00PM
368, HIGH ST NORTH, EASTHAM, LONDON, E12 6PH
TEL : 020 8586 0886
FAX : 020 8470 4745
MOBILE : 07956353774

Motor Masters
Top Quality Servicing & Repair on all Makes of Vehicles
M.O.T While You Wait
Unit 7 The Squirrel Trading Estate, Viveash Close, Nestles Ave, Hayes, Middlesex UB3 4RZ
Tel: 020 8561 9100
Fax: 020 8573 8641

To Advertise: 07957681944

MANGALA MOTORS
High Quality at Sensible Prices
* Car/Van Sales
* Full and Iterim service
* MOT & Mechanical Repairs
* Professional Technician
* Fully Guranteed Job
Call On
020 8203 6655
Unit 1, 3 & 4, The Bridges
Aerodrome Road, London NW4 4SS

Auto - Right
MOT's CLASS 4&7 (While you wait)
Mechanical and Crash Repairs, Servicing & Insurance work undertaken
(Courtesy car available on insurance work)
Unit 6, Endsleigh Industrial Estate, Endsleigh Road, Southall, Middx. UB2 5QR
Tel: 020 8843 1754

# கனடிய தமிழரின் வானொலி நாடக நூல் வெளியீடு.

கனடாவில் வாழும் வானொலி நாடக எழுத்தாளர் எஸ்.எஸ்.துரையின் 'வானொலி நாடகம் நான்காவது தொகுப்பு' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை 11.11.2006 அன்று லண்டன் சிவயோக கலையரங்கில் இடம்பெறவுள்ளது. லண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் இந்த நூல்வெளியீட்டு நிகழ்வினை ஏ.சீ.தாசீசியஸ் தலைமைதாங்கி நடத்தவுள்ளார்.

டாக்டர் எஸ்.ஞானச்செல்வன், டாக்டர் திருமதி கோணேஸ்வரி ஞானச்செல்வன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவர். நாடக நெறியாளர் க.பாலேந்திரா, புதினம் ஆசிரியர் ஈ.கே. ராஜகோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். மு.நித்தியானந்தன், திருமதி மாதவி சிவலீலன், க இராஜமனோகரன், சாம் பிரதீபன், எஸ்.கே. ராஜன், நூலகவியலாளர் என். செல்வராஜா, ஆகியோர் நூல் பற்றிய கருத்துரைகளை வழங்குவார்கள்.

தற்போது லண்டனில் தங்கியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தனின் இலக்கியச் சிறப்புரையும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் சேகரிக்கப்படும் நூல் விற்பனை நிதி, தாயகத்தின் செஞ்சோலை சிறார்களின் நல்வாழ்வு நிதியத்திற்கு வழங்கப்படும் என்று எழுத்தாளர் எஸ்.எஸ்.துரை தெரிவித்துள்ளார்.

# வல்வைத் தேவனின் நூல் வெளியீடு

விடுதலைக் கவிஞர் வல்வைத் தேவனின் சிந்தனைச் சிந்தல்கள் என்ற தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18.11.2006 சனிக்கிழமை லண்டன் மிச்சம் St. Barnabas Church Hall இல் இடம்பெறவுள்ளது. கவிதைகள் கட்டுரைகள் தாயகப் பாடல்கள் எனப் பல ஆண்டுகளாகத் தேடித் தொகுத்த அரிய தகவல்களை உள்ளடக்கியதாக பல்சுவைக் களஞ்சியமாக இந்நூல் வெளியிடப்படவுள்ளது. இந்நிகழ்வை வல்வைத் தேசியப் பேரவையின் தலைவர் பா.மகேந்திரராஜா தலைமையேற்று நடத்துவார்.

சமகாலம் ஆசிரியர் சூ யோ. பற்றிமாகரன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். வைத்திய கலாநிதி. என்.எஸ்.மூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரைகளை தமிழினி ஆசிரியர் ம.வா.குலேந்திரன், திருமதி மாதவி சிவலீலன், திருமதி த.ஜெகதீஸ்வரி, பொன் தேவராஜா, ச.சரவணமுத்து, கேமராஜ், திருமதி என்.காமினிதேவி, த.பாலேந்திரராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். டென்மார்க்கில் வாழும் எழுத்தாளரும், பூக்கள் திரைப்படத் தயாரிப்பாளருமான கி.செ.துரை சிறப்புரை ஆற்றுவார். ஏற்புரையை நூலாசிரியர் கி.கிருஷ ணானந்ததேவர் (கவிஞர் வல்வைத் தேவன்) நிகழ்த்துவார்.

THE EURO'S BEST PROFILES
(DOUBLE GLAZERS)
Manufatrures, Suppliers and Installers of:
Double glazed windows, Doors, Patio Doors, Conservettories and Porches in uPVC & Aluminum
(HOME IMPROVEMENT)
407 LEY STREET, ILFORD, ESSEX, IG1 4AB
TEL/FAX: 020 8478 8833
MOBILE: 07958 227 814/07950 446 978
www.bestprofiles.com

BITTU'S
HAIRS & BEAUTY
Tel: 020 8571 9912
Mob: 0781 882 2226
172 The Broadway Middlesex, Southall, UB1 1NT

beauty
Wholesale Ltd
FREETRESS
World's Finest
100% HUMAN HAIR
World's Most Advanced Synthetic Hair
MILKYWAY
100% HUMAN HAIR
FOR TRADE ENQUIRY CALL
020 8381 2000 / 41



Dr. சிவக்குமார்

# Hay Fever - ஹேய் பிவர்

ஹேய் பிவர் என்ற இவ் ஒவ்வாமை நோயால் 15 முதல் 20 வீதமான இங்கிலாந்து மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். அதாவது கிட்டத்தட்ட 7 மில்லியன் மக்கள் வருடாந்தம் பாதிக்கப்படுகிறார்கள். இது மகரந்தங்களினால் ஏற்படும் ஒவ்வாமையினால் வருகின்றது. நம் உடல் கலங்கள் மகரந்தங்களை ஆபத்தானது என தீர்மானிப்பதால் அதனை எதிர்க்க உடலில் உள்ள சில கலங்கள் ஹிஸ்ரமின் என்னும் இரசாயன பதார்த்தத்தை சுரக்கிறன. கண், மூக்கு, தொண்டை போன்றவற்றின் மேற்பரப்பில் உள்ள கலங்கள் இம்மகரந்தங்களின் தூண்டலினால் ஹிஸ்ரமினை சுரந்துவிடுகின்றன. ஹிஸ்ரமின் உடல் எதிர்ப்பு நிலை காரணிகளுக்கு (immune systemற்கு) தகவலை அனுப்பி உடலை பாதுகாப்பு வேலையை செய்விக்கின்றது. இது பொதுவாக இளம் வயதினருக்கு வருகின்றது. ஒரு முறை வந்தால் பின்னர் ஒவ்வொரு வருடமும் வந்து கொண்டே இருக்கும். சிலருக்கு இது சில வருடங்களின் பின் மறைந்துவிடும். சிலருக்கு வருடங்கள் கூடக்கூட இதன் தாக்கம் கூடிக்கொண்டு போகும்.

## Hay Fever இற்கான காரணிகள்:

புற்களின், செடிகளின், மரங்களின் பூக்களின் மகரந்தங்கள் போன்றன. பொதுவாக மே தொடக்கம் யூலை வரை மரங்களின் மகரந்தங்களால் ஏற்படும். மார்ச் தொடக்கம் மே வரை புற்களின் மகரந்தங்களினால் ஏற்படும்.

## இதன் அறிகுறிகள் என்ன?

பொதுவாக தடிமன், மூக்கு அரிப்பு, எரிச்சல், மூக்கில் இருந்து நீர் வடிதல், மூக்கடைப்பு, தும்மல், தலையிடி, நீர் நிறைந்த கண், சிவந்த கண், கண்ணீர் வடிதல், தொண்டை அரிப்பு போன்றன இருக்கும். சிலருக்கு மூக்கில் மட்டும் அறிகுறிகள் தெரியும். சிலருக்கு கண்ணில் மட்டும் அறிகுறிகள் தெரியும். சில சமயங்களில் மணம் உணர முடியாமை, சுவை அறிய முடியாமை, முகத்தில் வலி, வியர்த்தல், தலையிடி அதிகமாக இருத்தல் போன்றவை காணப்படலாம். அஸ்மா உள்ளவர்களுக்கு Hay fever ஏற்பட்டால் தாக்கம் கூடும்.

## இதை எவ்வாறு தடுக்கலாம்?

இதை தடுப்பது கடினம். ஆனால் தவிர்க்கலாம். மகரந்தம் அதிகமாக உள்ள இடங்களை தவிர்க்கலாம். மார்ச் தொடக்கம் யூலை வரை தேவையற்று வெளியில் செல்வதை தவிக்கலாம். கார் கண்ணாடிகளை மூடியபடி பயணம் செய்ய வேண்டும். விட்டிற்கு வந்தவுடன் குளிக்க வேண்டும். மகரந்தங்களை அதிகமாக அகற்றும் Vipper இனை பாவிக்கலாம். வீட்டு ஜன்னல் கதவுகளை மூடி விடலாம். செல்லப் பிராணிகள் வளர்ப்பதை தவிர்க்கலாம். அப்படி வளர்த்தால் அதனை தொடுவதை தவிர்க்கலாம்.

## இதற்கு என்ன சிகிச்சை?

Antihistamin nose sprays, Antihistamin tablets, Streroid nose sprays, eye drops போன்றன உண்டு. இந்நோய் அதிகமானால் அல்லது பரீட்சைக்கு படிக்கும் மாணவர்கள் என்றால் short course of streroid பாவிக்கலாம். தற்போது இதற்கு தடுப்பூசி போடலாம் என கண்டுபிடித்துள்ளார்கள்.



Asian Funeral Care Ltd
*A personal tailored service to meet every induvidual religious cultural need at reasonable rates
*Private viewing and Service Hall
Tel :0208 909 3030
Mob:07970 934623


New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

Prestige
WINDOWS & DOORS LTD
Unbeatable Prices & Quality
Call for free Quote
Fensa Registered
T: 020 8503 4731
F: 020 8548 0466
Windows make houses
156 - 158 KATHERINE ROAD EASTHAM LONDON E6 1ER
prestigewindows@hotmail.co.uk

A&G WINDOWS LTD
Manufacturers & Installers of Quality Double Glazing in U.P.V.C. Windows, Doors, Patio Doors, Porches, Conservatories
FREE ESTIMATE
Unit6, Derby Road, Hounslow Middx TW3 3UH
Tel: 020 8572 5567

# தமிழக உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் ஓர் ஆய்வு:

By T. Jeyabalan



தமிழகத்தில் மைனாரிட்டியாக ஆட்சியில் அமர்ந்த தி.மு.க அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை ஓரளவுக்கு நிறைவேற்றியதால் நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. 2001ல் உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்றதை விட இம்முறை பெரும்பாண்மையான மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாவட்ட, பஞ்சாயத்து என அனைத்து இடங்களிலும் பெரும் வெற்றி பெற்றுள்ளது. மேலும் மதுரையில் நடைபெற்ற இடைத்தேர்தலிலும் முன்பைவிட கூடுதலான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளது. மைனாரிட்டி அரசு என விமர்சனங்கள் எழும் போதும் கூட்டணி கட்சிகளின் நிர்ப்பந்தங்கள் வலுவடைந்து வரும் நிலையில் இந்த வெற்றி தி.மு.க விற்கும் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இருப்பினும் நடந்துமுடிந்த உள்ளாட்சி தேர்தலில் ஜனநாயகப்படுகொலை என்பதும் கட்டுக்கடங்காத வகையில் அரங்கேறியுள்ளது. ஆளும் தி.மு.க அரசு தனது பலாத்காரத்தை பல்வேறு இடங்களில் பயன்படுத்தியுள்ளது. சென்னை மாநகராட்சி தேர்தலில் பல்வேறு இடங்களில் மக்கள் வாக்களிக்காமல் திரும்பியுள்ளனர். வாக்காளர்களின் வருகைக்கு முன்னரே அவர்களின் வாக்குகளை கள்ள ஓட்டுக்கள் மூலம் நிரப்பிவிட்டனர். பல இடங்களில் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளது. பல்வேறு கண்டனங்கள் எழுப்பப்பட்ட நிலையில் தி.மு.க சட்ட மன்ற உறுப்பினரும் தி.மு.க வாக்கு கவுன்சிலர் ஒருவரும் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்து உள்ளனர்.

எந்த ஆளுங்கட்சியாயினும் அரசு அதிகாரத்தில் இருக்கும் போது இப்படிப்பட்ட அராஜகத்தை நிறைவேற்றுவது என்பது தமிழக அரசியலில் காலங்காலமாக இருந்து வருகின்றது. ஜெயலலிதா ஆட்சியிலும் இது போன்ற அடாவடித் தனமான தேர்தல்களை தி.மு.க வும் எதிர்கொண்டுள்ளது. இருப்பினும் ஜெயலலிதா படுதோல்வியை சந்தித்த நிலையில் ஜனநாயகப் படுகொலை என்று அறிக்கை விட்டிருப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

தி.மு.க கூட்டணி கட்சிகளுக்குள்ளேயும் குழப்பங்களும் மோதல்களும் ஏற்பட்டுள்ளது. மார்க்சிஸ்ட்டு கட்சி தி.மு.க வின் அராஜகத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது. பா.ம.க ராமதாஸோ தி.மு.க தங்களுக்கு பச்சை துரோகம் இழைத்துவிட்டதாக பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துள்ளனர். தி.மு.க வில் கருணாநிதி, பேராசிரியர் தவிர அத்தனை பேரும் துரோகிகள், தொண்டர்கள் உட்பட என்ற ராமதாசின் அறிக்கை தி.மு.க வின் இரண்டாங்கட்ட தலைவர்களிடையே கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ஆற்காடு வீரசாமி எது துரோகம் என்ற தலைப்பில் புள்ளிவிபர அறிக்கை விட தற்போது பா.ம.க அடங்கி வாசிக்க ஆரம்பித்துவிட்டது. துணை நகர திட்டத்தை எதிர்த்த போது தி.மு.க அடங்கி வாசித்ததை போல இப்பவும் அடங்கியிருக்கும் என்ற பா.ம.க வின் எண்ணத்தை தி.மு.க வின் அறிக்கை நிர்மூலமாக்கியுள்ளது. இந்நிலையில் சமீபத்தில் நடந்த கூட்டத்தில் தமிழை காப்பாற்ற கருணாநிதியை தவிர யாராலும் முடியாது என்று அறிக்கை விட்டு தி.மு.க வுடன் சமாதானம் ஆகியுள்ளார் ராமதாஸ்.

எதிர்கட்சியாக செயல்படும் ஜெயலலிதாவோ கருணாநிதியை ஏக வசனத்தில் விமர்சிக்க நடுநிலையாளர்கள் கூட முகம் சுழிக்கும் அளவுக்கு தமிழக அரசியலின் தரம் கீழிறங்கி போயுள்ளது. துணை நகரத்திட்டத்தை எதிர்த்த ஜெயலலிதா அத்துடன் தி.மு.க தலைவரின் குடும்பத்தையும் கேவலப்படுத்தி "கருணாநிதி துணை தேடுகிறார்" என்று குறிப்பிட்டுவிட உடனே கருணாநிதி ஜெயலலிதாவை "துணையே தேடாதவர் போல" என்று மறு அறிக்கைவிட மூன்றாம் தர அரசியல்வாதிகளை மிஞ்சும் அளவுக்கு இருவரும் சென்றுள்ளது தமிழக மக்களின் தலைவிதி. மேலும் ஜெயலலிதா அரசு ஊழியர்களையும் மாவட்ட ஆட்சியாளர்களையும் விட்டுவைக்கவில்லை. அவர்களையும் ஏக வசனத்தில் விமர்சிக்க அதிகாரிகளும் கொதிப்படைந்து போயுள்ளனர். சமீபத்தில் ஜெயலலிதா தே.மு.தி.க வின் தலைவர் விஜயகாந்தை குடித்துவிட்டு சட்டமன்றத்துக்கு வரும் தலைவர் என கூற இப்போது யார் யார் எப்பொழுதெல்லாம் குடிக்கிறார்கள் என அறிக்கைகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற மதுரை இடைத்தேர்தலிலும் உள்ளாட்சி தேர்தல்களிலும் விஜயகாந்தின் கட்சி கணிசமான ஓட்டுக்களை வாங்கியதுடன் அ.தி.மு.க வின் மீதான அதிருப்தி ஓட்டுக்கள் விஜயகாந்திற்கு கிடைத்திருப்பதாக கூறப்படுகின்றது. மேலும் விஜயகாந்தும் ஜெயலலிதாவை கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்ததும் அதன் எதிர்வினையாக ஜெயலலிதா குடிகார விஜயகாந் என அறிக்கை விட்டதும் தமிழகத்தின் சமீபத்திய கலாட்டா.

இந்தியா முழுவதும் 15 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களும் தமிழகத்தில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் உட்பட்டவர்கள் சிக்கன்குனியாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று சிக்கன்குனியாவும் அரசியலில் சிக்கி தவிக்கிறது. சிக்கன்குனியா தமிழகத்தில் இல்லை என முதலில் அறிக்கை விட்ட சுகாதார, அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் பின்பு இந்நோய் தமிழகம் முழுவதையும் தாக்கியவுடன் முந்தைய அரசின் மெத்தன போக்காலேயே இந்த நோய் பரவ ஆரம்பித்தது என குறிப்பிட்டுள்ளார். கடந்த ஜூலை மாதம் அருகில் உள்ள ஆந்திர பிரதேசத்தில் இந்நோய் ஆரம்பித்து அங்கிருந்து தமிழகத்துக்கு மெதுவாக பரவத்தொடங்கியதாக கூறப்படுகின்றது. ஆனாலும் சுகாதார மையங்களும் தமிழக அரசின் மெத்தன போக்காலும் தான் ஒரு இலட்சத்துக்குட்பட்ட தமிழக மக்கள் இந்நோயால் வீட்டில் வேதனையில் முடங்கியுள்ளனர். வயது முதிர்ந்தவர்கள் இந்நோயால் இறந்திருக்கக்கூடும்.

ஒருபுறம் பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் போட்டி போட்டுக்கொண்டு தொழிலை தொடங்க முன்வந்துள்ளதால் தமிழகம் முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது என தயாநிதி மாறனின்

**Cont-page 9**


JMW SHOPFRONTS & SHUTTERS LTD
Unit 34-35-36 Barking Industrial Park
Alfreds Way Barking Essex IG11 OTJ
Tel: 020 8591 5760 / 020 8591 7637
Fax: 020 8591 2833
Email: jmw_shopfronts@hotmail.com

PAMIR CARPETS & FURNITURES
SPECIAL OFFER
Laminate flooring from £6.99 per sqm
3 Bed Full House Carpet, Underlay & fitting £499 only
Free Estimating Delivery Fitting Underlay
020 8578 5080
495-497 Greenford Road Greenford

VISION PROPERTY & MORTGAGES 020 8848 4030
www.visionestate.co.uk
- Purchase/Re-mortgages 100%
- Up to 95% Buy-to-Let mortgages
- 100% commercial Loan-Shop/Restaurant
- Country court Judgements/Default/arrears
- No Proof Income, No Proof Accounts, Any Citizen No Problem
- Full Management & Maintenance Commercial Property

Mortgage is not a cost - an investment with long time benefit
So why not pop in today to find our more
Vision Property & Mortgages, 1104 Uxbridge Road, Hayes Middlesex, UB4 8QH
Raju: 07862 229 579 Tel. 020 8848 4030 Fax. 020 8848 3960

Ellis & Co. Residential Sale & Letting
வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

GOLDMAN
www.goldmanfinance.com www.goldmanestate.com
info@goldmanfinance.com info@goldmanestate.com
- Property Sales
- Property Lettings
- Property Management
- Commercial Loan Arrangement
- Life Insurance
- Mortgages
- Accountancy
- Pensions

219 Broadway, Southall Middlesex, UB1 1NB
T. 020 8867 7711
020 8867 7733
F. 020 8867 7722

BARKING SHOPFRONTS LTD
Tel: 020 8591 0504 or 020 8594 0723 (6Lines)
Fax: 020 8594 3060
www.barkingshopfronts.co.uk
POWDER COATED & ALUMINIUM SHOPFRONTS
ELECTRIC & MANUAL SHUTTERS
SIGNS - SECURITY GRILLES
GLAZING REPAIRS / MAINTENANCE AGREEMENT
THE COMPLETE SHOPFITTING SERVICE AT COMPETITIVE PRICES
UNIT 1, BARKING INDUSTRIAL PARK, ALFREDS WAY, BARKING, ESSEX IG11 OTJ (MAIN ENTRANCE FROM RIPPLE ROAD)

Popular Builders & Merchants
Specialist in:
Bath Shower, Shower Cubical, Jacuzzi, Steam Cabin, Vanity Units, Sanitary Ware, Wall Cladding, Plumbing, Building Material and DIY & Granite Floor Marble Tiles
020 8471 1677
293-295 High Street North, Manor Park, E12 6SL
popularbuilders@hotmail.com

Panesar Electrical Co.
EST 1981
- Wylex 9 Way Split Load
- RCD+Main Switch
- 9 MCBs
ONLY £60
- Lux 10 Way Split Load
- RCD+Main Switch
- 10 MCBs
ONLY £39.50
- Lux 6 Way Split Load
- RCD/M/SU
- 6MCBs
ONLY £35

2 Gang 13a Sotcekts from £0,95
4 Inch Timer Fans from £9,95
2 Gang 13a Chrome Socket from £5
9 Inch Pendants from £0,95
www.lowvoltagedownlights.com pan77@hotmail.co.uk
362 - 364 High Street, North Manor Park, London E12 6PH
Tel: 020 8472 1873 Fax: 020 8471 6271

J.M. Shopfitters
warm | welcoming | creative
The right job, at the right place, at the right time...
Call us for an estimate& advice in any area
Unit 1c, Barking Industrial Park, Alfreds Way, Barking, Essex IG11 OTJ
t. 020 8591 5842
f. 020 8591 5116
www.jmshopfitters.co.uk

Woodstyle Kitchens & Bedrooms Ltd
Manufacturers of Superior Bedroom, Kitchen & Bathroom Units, Doors and Accessories
East London: Unit 4A R/O 328 Romford Road (via Palmerston Road) - Forest Gate London E7 8BS Tel: 020 8519 0100 Fax: 020 8555 1513
Essex: Unit 3 Ash Industrial Estate - Merring Way - Flex Meadow - The Pinnacles - Harlow - Essex - CM19 5TJ Tel: 01279 442100 Fax: 01279 442500
www.woodstyleuk.com

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

Cont-from page 7

ஆதரவாளர்கள் கூறுகின்றார்கள். இதன் ஒரு பகுதியாகத் தான் சென்னையை விரிவுபடுத்தும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட துணை நகரத்திட்டம் கடும் எதிர்ப்புக்கிடையே கைவிடப்பட்டது. துணை நகரத்திற்காக திட்டமிட்ட பகுதிகள் வன்னிய சமுதாயம் சார்ந்த விவசாயிகளின் பகுதிகள் என்பதால் ராமதாஸ் இத்திட்டத்தை எதிர்த்துள்ளார். ஆனாலும் இப்பகுதியில் கணிசமான அளவுக்கு தலித் மக்களும் இருப்பதால் இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கலாம் என்பதால் துணை நகரத்திட்டத்தை திருமாவளவன் ஆதரித்துள்ளார்.

தி.மு.க விற்கு திருமாவளவனின் வருகை மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில் பா.மா.கா வை ஓரங்கட்ட தி.மு.க முனைகிறதாக கூறப்படுகிறது. சென்னை மாநகராட்சி துணை தலைவர் பதவிக்கு தலித்துக்களைத் தான் விடுவது என்பது தி.மு.க வின் கொள்கையாக இருந்துவருகின்றது. சென்னை மாநகராட்சியில் தி.மு.க வெற்றிபெற்றவுடன் துணைத் தலைவர் பதவிக்கு தலித் பெண்ணை அறிவித்தது.

இந்நிலையில் பா.மா.கா தனது கட்சிக்கு மாநகராட்சியில் துணைத் தலைவர் பதவி ஒதுக்கப்பட வேண்டும் என அறிக்கைவிட கருணாநிதியும் அப்பதவிக்கு பா.மா.கா வை சேர்ந்த தலித் பெண் பட்டதாரியை சிபாரிசு செய்வதாக அறிக்கை விடுத்துள்ளார். இந்நிலையில் ஒருபுறம் பா.மா.கா வின் உள்விவகாரங்களில் தி.மு.க தலையிடுவதாக கூறும் பா.மா.கா அதே நேரத்தில் தான் வன்னியர்களின் கட்சி என்ற சாயத்தை கலைக்கவும் பெரும் பாடுபட்டுக் கொண்டு இருக்கிறது. துணைத் தலைவர் பதவி பா.ம.க தலித் பெண்ணுக்கு கிடைக்கவில்லை என்றால் இக்கட்சிக்கு தலித் விரோத கட்சி என்று முத்திரை குத்தப்பட்டு விடும்.

அ.தி.மு.க வின் முன்னாள் அமைச்சர்களின் விடுகளில் அதிரடி சோதனை மேற்கொள்ளப்பட்டதால் அ.தி.மு.க வும் ஆட்டங்காணத் தொடங்கியுள்ளது. பல முன்னாள் அமைச்சர்கள் கட்சி தாவுவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஜெயலலிதாவின் அன்பு சகோதரரும் ம.தி.மு.க வின் தலைவருமான வைகோ தற்போதைய உள்ளாட்சி தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியினால் துவண்டு போயுள்ளார். ஜெயலலிதாவின் மொழியில் கூறப்படுவது என்றால் 3 சதவீதத்துக்கும் குறைவான ஓட்டுக்களைப் பெற்று காற்றில் கலந்த பெருங்காயம் போல இருப்பிடம் தெரியாமல் இருக்கிறார். சமீபத்தில் இவர் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யும் படி தனிநபர் ஒருவர் தொடுத்த வழக்கில் தமிழக அரசு சார்பில் எதிர்ப்பு தெரிவித்ததினால் வழக்கு உயர்நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. கருணாநிதி தன்னை கைது செய்தால் மீண்டும் ஒரு பரபரப்பை அரசியலில் ஏற்படுத்தலாம் என எண்ணிக் கொண்டிருந்த வேளையில் தி.மு.க அரசு அதிலும் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டதால் மௌனமாக இருக்கிறார் அண்ணன் வைகோ.

இலங்கை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ இந்திய விஜயம் செய்ய இருப்பதை பாராளுமன்ற கட்சித் தலைவர் ராமதாஸ் கண்டித்துள்ளதுடன் அவர் வருகையை எதிர்த்து போராட்டம் நடத்தப் போவதாக கூறியுள்ளார். உள்ளாட்சி தேர்தல் நடந்து முடிந்து ஓய்ந்து போன நிலையில் மீண்டும் ஈழ ஆதரவு நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தை ராமதாஸ் தொடக்கி வைத்துள்ளார்.

FREE ADVT

INTERNATIONAL REFUGEES ORGANISATION

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள

ஈழத் தமிழ் அகதிகளுக்கு உதவிடுவீர்

தமிழ் ஈழத்தில் இருந்து அகதிகளாக தமிழக அகதி முகாம்களில் அடைபட்டிருக்கின்ற எங்கள் சொந்தங்கள் சோகத்திலும் சொல்லொணாத் துயரத்திலும் மூழ்கியுள்ளனர்.

இவர்கள் மலசல கூட வசதி போன்ற அடிப்படை வசதிகள் அற்றவர்களாக காணப்படுகின்றனர்.

119 முகாம்களில் இவர்கள் கடந்த 23 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள். அங்கே பிறந்து வளர்ந்த நம் உறவுகளின் குழந்தைகள் உயர்கல்வி பயில தடை விதிக்கப்பட்டும், மருத்துவ வசதியில், சுதந்திர நடமாட்டத்தில் கண்காணிக்கப்பட்டும் வருகின்றனர். இவர்களுக்கு உதவ சர்வதேச அகதிகள் நிறுவனத்தின் இந்தியக் கிளை இவ்வாண்டு ஆகஸ்ட் முதல் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

இந்தியக் கிளைத் தலைவராக பாவம் தொண்டு நிறுவனத் தலைவர் திரு. பா. கலியாணசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 25 ஆண்டுகள் அரச பணியில் பெற்ற ஊதியத்தை அநாதைச் சிறுவர்களுக்கு வழங்கிவிட்டு ஹோட்டல்களில் சர்வராக பணிபுரிந்து தனது வாழ்வுக்கு அந்த வருமானத்தை பயன்படுத்தியவர். அமெரிக்க அரசு இவரது சேவையை பாராட்டி "புத்தாயிரத்தின் மனிதர்" என்ற பட்டத்தோடு வழங்கிய 35 கோடி இந்திய ரூபாய்களை அநாதைச் சிறார் பல்கலைக்கழகம் அமைக்க வழங்கியவர்.

உங்கள் உதவிகளை காசோலையாக அல்லது வரைவோலையாக "PAALAM" என்ற பெயருக்கு I.R.O., No 1, 4th Main Street, Kasturiba Nagar, Adyar, Chennai-600 020 - Tamil Nadu - South India என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

லண்டன் தொடர்புகட்கு: திரு.வ.பா. குலேந்திரன் – 00 44 208 682 4494

கனடா தொடர்புகட்கு: திரு. செந்திலாதன் (செந்தி தமிழன் வழிகாட்டி)

# காரை சுந்தரம் பிள்ளையின் நினைவும் நூல் வெளியீடும்



jpUkjp Re;juk;gps;isaplk; f ghNye;jpuh E}iyg; ngWfpwhu;.

அமரர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் ஈழத்து 'மலையக கூத்துக்கள்' 18வது நூல் வெளியீட்டு விழா ஒக்ரோபர் 8ல் Sudbury Primary Schoolல் திரு திருமதி விக்னேஸ்வரன் தம்பதிகளின் மங்கள விளக்கேற்றலுடன், ஆரம்பமாகியது. கூட்டத்தை நூல் ஆய்வாளர் மு நித்தியானந்தன் தலைமை வகித்தார், இவ் விழாவானது அமரர் காரை சுந்தரம்பிள்ளையின் ஓராண்டு நினைவையொட்டி நடைபெற்றது.

செல்வி அபிராமி நவநீதநாதன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். அதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. காரை சுந்தரம்பிள்ளையின் மகன் திருப்பரங்குன்றன் வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்து மு நித்தியானந்தன் தலைமையுரை நிகழ்த்தினார். புலவர் இளவாலை அமுது ஆசியுரை வழங்கினார். கலாநிதி இ நித்தியானந்தன், எஸ் கோணேசலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார், சு ஸ்ரீகாந்தலிங்கம் நூலை வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதலாவது பிரதியை திருமதி இந்திராவதி சுந்தரம்பிள்ளை வழங்க அவைக்காற்றுக் கழக இயக்குநர் க பாலேந்திரா நூலைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து சிறப்பிதழ்கள் வழங்கப்பட்டது.

fPo;: khjtp rptypd; ed;wp njuptpf;fpwhu;.
tyk; Nky;: V rP jhrPrpa]; E}yha;T nra;fpwhu;.
tyk; fPo; rhk; gpujPgd; E}yha;T nra;fpwhu;.







ஏ சீ தாசீசியஸ், சாம் பிரதீபன், த ரவீந்திரன் ஆகியோர் நூலாய்வு செய்தனர். காரை சுந்தரம்பிள்ளையின் மகள் மாதவி சிவலீலன் நன்றியுரை வழங்கி விழாவை நிறைவு செய்தார்.

THE Today's GROUP
hothi
Hothi Cash & Carry Ltd.
35-37 Park Royal Road, Park Royal, London NW10 7LQ T.020 8965 2428 F.020 8553 1097
Suppliers of wines, beers and spirits
Wide range of product available at very competitive prices.

FUNTASIA
Fancy Dress & Party Shop
Specialist in Party Goods
Established since 1984
229 Kenton Road, Kenton, Harrow HA3 0HD
Tel/Fax: 020 8907 1333
Email: funtasia@london.com
Web: www.funtasiaworld.com

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

scenic Tours and Travel
Special Fares to
Bangalore, Bombay, Chennai, Calcutta, Colombo, Delhi, Hyderabad, Trivandrum
542 Kingsbury High Road, London NW9 9HH
Tel: 020 8204 9222
E-mail: info@scenictoursandtravel.com
www.scenictoursandtravel.com

OM Jewellers
Specialists in 22 Karat Gold & Diamond Jewellersy
25 King Street Southall Middlesex UB2 4DG
020 8574 6388 www.omjewellers.net

TV
+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Specian Rates: COCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
*Two regular shipments to Colombo per month
*Good arrive within 17 days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787 Fax: 020 8888 5445
E-mail: tricko@btclick.com
Unit 4, Bitten Place, Coburg Road, Wood Green London N22 6TP

# காளிமுத்து மறைவு

நவம்பர் முற்பகுதியில் சட்டப்பேரவைத் தலைவர் காளிமுத்து மரணமடைந்தார். இவரின் மறைவுக்கு கருணாநிதி, ஜெயலலிதா உட்பட எல்லோரும் அஞ்சலி செலுத்தினர்.

திராவிட இயக்கத்தைச் சேர்ந்த இவர் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ராமுத்தேவன் பட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் அந்த இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்களில் ஒருவராவர். நன்றாக பேசக்கூடியவர். 1971ல் இவர் முதல்முறை தேர்தலில் போட்டி போட்டு வென்றும் உள்ளார். எம்.ஜி.ஆர் அ.தி.மு.க தொடங்கிய நாள் முதல் அவரோடு இருந்தவர் இந்த காளிமுத்து. எம்.ஜி.ஆர் முதல்வரான காலம் தொடக்கம் அவருக்கு அமைச்சராக இருந்தவர். ஆனால் எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவை தனது அரசியல் வாரிசாக அறிவித்ததும் அதை கடுமையாக எதிர்த்தார். எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின்பு ஜானகி அணி சார்பாக தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் அவர் தேர்தலில் வெற்றியடையவில்லை.

பின்பு அவர் பல காரணங்களால் தி.மு.க, அ.தி.மு.க என்று கட்சி மாறிக்கொண்டு இருந்தார். கடைசியில் அவர் ஜெயலலிதாவின் கீழ் செயல்பட்டார். 2001ல் ஜெயலலிதா ஆட்சியில் அவருக்கு சட்டப்பேரவைத் தலைவர் பதவி கிடைத்தது. அதன் பிறகு உடல்நலம் குன்றியதால் அவர் தேர்தல்களில் போட்டியிடவில்லை.

# இளம்பெண்ணின் பரிதாப மரணம்

ஜனவரியில் நடக்க இருக்கும் திருமணத்திற்காக நவம்பர் 3ல் மகளுக்கு புடவைகளையும் தங்க நகைகளையும் கொள்வனவு செய்யச் சென்ற காணமூர்தி தம்பதிகளின் மகள் நிருஜாவின் திடீரென மரணமடைந்தார். வூல்விச்சில் வசிக்கும் இக்குடும்பத்தினர் கூறைச் சேலையை எடுத்துக் கொண்டு உணவருந்தி விட்டு நகைகளைக் கொள்வனவு செய்ய அப்ரன்பார்க் சென்றனர். அங்கு வாந்தி எடுத்து சிறிது நேரத்தில் மயக்கமடைந்த நிருஜா உடன் மரணமடைந்தார்.பிரேத பரிசோதனை முடிவில் மரணத்திற்கான காரணம் அறியப்படவில்லை.

# விம்பத்தின் குறும்பட விழா

நவம்பர் 25ல் விம்பம் குழுவினரின் குறும் திரைப்பட விழா நடைபெறவுள்ளது. 2004ல் ஆரம்பிக்கப்பட்ட விம்பம் அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் குறும்பட விழாவை நடத்தி விருதுகளை வழங்கி படைப்பாளிகளை ஊக்குவித்து வருகின்றது. இவ்விழாவில் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்தும் தாயகத்தில் இருந்தும் வெளியான குறும் திரைப்படங்கள் காண்பிக்கப்பட உள்ளது. சில நிமிடங்கள் முதல் 30 நிமிடங்கள் வரையான தெரிவு செய்யப்பட்ட இக்குறும்படங்கள் பார்வையாளர்கள் மத்தியில் சினிமா பற்றிய விழிப்புணர்வைத் தூண்டுவதாகவுள்ளது.

# ஜேர்மனி ஸ்ருட்கார்ட் நகர கருத்தரங்கு

## இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும், புலம்பெயர்வாழ் தமிழ்பேசும் மக்களும்

இலங்கையர் ஜனநாயக முன்னணி ஜெர்மனி ஸ்ருட்கார்ட் நகரத்தில் அக்டோபர் மாதம் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டது. இவ்வமைப்பில் பங்கு கொண்டவர்கள் மிகவும் குறுகிய நாட்களுக்குள் இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும், புலம்பெயர்வாழ் தமிழ்பேசும் மக்களும் என்கிற தலைப்பில் இருநாட்கள் நடைபெறக்கூடிய ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தனர்.

கேதீஸ்வரன் நினைவரங்கம் என்கிற பெயர் சூட்டப்பட்ட மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது..இலங்கை, இங்கிலாந்து, நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் இருந்து சுமார் 130பேர் கலந்து கொண்டனர். ஒரு நிமிடம் இலங்கையில் போராட்ட அனர்த்தங்களால் மரணித்த பொதுமக்கள் போராளிகள் அனைவரும் மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான கருத்தரங்கில் முதலாவதாக ஒவ்வொரு வரும் தம்மை தமது வாழ்விடம், தமது அரசியற் மற்றும் பொதுச்செயற்பாடுகள் அனைத்தையும் கூறி அறிமுகம் செய்தனர். பெரும்பாலும் மனிதநேயத்தை வலியுறுத்தி அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும் என பலரும் தமது அறிமுகத்தில் தெரிவித்துக்கொண்டனர். தமிழர். விடுதலைக்.கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ரி.பி.சி வானொலியின் அரசியல் ஆய்வாளர்களான சிவலிங்கம், பஷீர் இவர்களுடன் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்(பத்மநாபாஅணி), டெலோ (ஸ்ரீசபாரட்னம் அணி) ஈ.என்.டி.எல்.எப், ஈ.பி.டி.பி கிழக்கிலங்கை ஜனநாயகமுன்னணி, தேனீ, விழிப்பு இணையத்தளத்தினர், ஸ்ருட்காட் இலங்கையர் சங்கத்தினர், ரி.பி.சி வானொலி அறிவிப்பாளர்கள், நேயர்கள், சமாதான, ஜனநாயக விரும்பிகள் என ஐரோப்பிய தழுவிய அளவில் கலந்துகொண்டிருந்தனர்.

## பாராளுமன்றப்பிரதிநிதியான நடராஜா ரவிராஜின் கொலைக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுக்க வேண்டும்

# இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

10.11.06ல் கொழும்பில் இனம் தெரியாத நபர்களாற் சுட்டுக்கொல்லப்பட்ட பாராளுமன்றவாதியான நடராஜா ரவிராஜின் கொலைக்கு எனது ஆழ்ந்த மனவருத்தம். அவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.அரசாங்கத்தால் பாதுகாக்கப்படவேண்டிய ஒரு பாராளுமன்றவாதியின் கொலைக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுக்கவேண்டும். ஜனநாயகமுறையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களைப் பாதுகாப்பது ஒரு அரசாங்கத்தின் தலையாய கடமை. இது கூட ஒரு அரசாங்கத்தால் செய்யமுடியாது என்றால் அந்த அரசாங்கத்தின் பாதுகாப்பு நிர்வாகம் பற்றிச் சந்தேகம் வருகிறது.தமிழர் முன்னணிப் பாராளுமன்றவாதிகள் அத்தனைபேரும் அரசபாதுகாப்பு வலையத்துள் வாழும்போது ரவிராஜ் தனது சொந்தமனையில் அரசாங்கம் கொடுத்த பாதுகாப்புடன் வாழ்ந்திருக்கிறார். வெள்ளிக்கிழமை (10.11.06) காலையில் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டி கொடுத்துவிட்டுத் திரும்பி வரும்போது சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

சீறும் சிறுத்தைகள் (?) என்ற பெயரில் ஒரு குழு இந்தக் கொலைக்குப் பொறுபெடுத்திருப்பதாகப் பத்திரிகைச்செய்திகள் சொல்கின்றன. அரசியற் கருத்துக்களுக்காகத் தமிழர்களைத் தமிழர்களே அழித்தொழித்தால் யாருக்கு இலாபம் என்பதை இந்தக் கொலைக்குப்பொறுப்பானவர்கள் சிந்திதுப்பார்த்தார்களோ தெரியாது. உலகில் எவையுமே இறைவன் படைப்பு, உனக்குள்ள ஒவ்வொரு உரிமையும் கடவுளாற்படைக்கப்பட்ட அத்தனை ஜீவன்களுக்கும் உண்டு. தேவையில்லாமல். ஒரு எறும்பைக்கூடக் கொல்வது பாவம் என்று இளமையில் எங்கள் தாய் தகப்பன் சொல்லி வந்திருக்கிறார்கள். இன்று எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கியைத்தூக்கி உயிர்களை அழிப்பதிலிருந்து நேர்மை, பண்பு, மனிதாபிமானம் உள்ள ஒரு நல்ல தமிழ்ச்சமுதாயத்தின் மனச்சாட்ச ஒட்டுமொத்தமாக இறந்து விட்டதா என்ற சந்தேகம் பிறக்கிறது..

மக்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரு மனிதன் சமுதாயத்தின் மிகவும் உயர் நிலையில் உள்ளவன். படித்தவன், பண்புள்ளவன், மக்களின் தேவைக்குக்குரல் கொடுப்பவன், தன் ஆழ்மையின் மூலம், தன்னை நம்பியிருக்கும் மக்களுக்கும் அவன் சார்ந்த சமுதாயத்திற்கும் நன்மை செய்யப் புறப்பட்டவன். அவன் செய்வதிலும் சொல்வதிலும் கருத்து வேற்றுமை, அரசியல்வேறுபாடுகள் இருக்கலாம் அதை அரசியல் வழியில் தீர்க்க முயற்சிக்கலாம். அதைத் தவிர்த்து, எதற்கெடுத்தாலும் துப்பாக்கியைப்பிரயோகிப்பது புத்திஜீவித்துவமல்ல. இதை எழுதுவதால் என்னை நோக்கியும் யாரோ ஒரு இளம் மனிதனின் துப்பாக்கியின் சன்னங்கள் தீர்த்து முடிக்கப்படலாம். சமுதாய நலத்தில், முன்னேற்றத்தில், நம்பிக்கை கொண்டவர்கள், இறப்புக்குப் பயப்பட்டால் எதையும் செய்யமுடியாது, அதற்குத்துணிவும் வராது. சமுதாயத்தில் கேடும் அழிவும் வரும்போதுப் எஙேயோ இருந்து ஒருத்தன்.:.ஒருத்தி துணிவுடன் செயற்படுவார்கள், இந்த நியமத்திற்தான் உலகில் வாழ்க்கையின் படிமங்கள் காப்பாற்றப்படுகின்றன, தொடர்கின்றன.

அநியாமாக கொலை செய்யப்பட்ட திரு ரவிராஜ் அவர்களை எனக்கு நேரடியாகத் தெரியாது. கடந்த வருடம், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரான கணேசலிஙம் என்பவர் தனது வேலைக்காரப் பெண்ணான 13 வயது யோகேஸ்வரியைப் பாலியற் கொடுமைகளுக்குள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் நீதிஸ்தலம் போனபோது கணேசலிஙத்தின் கொடுமைக்காளான

Cont page 11

Cont-from page 10

ஏழைப்பெண்ணுக்கு ஆதரவாகப் பெண்கள் இணையத்தளமான ஊடறு மூலம் குரல் கொடுத்தேன். கணேசலிங்கத்துக்கு வாதாடப்போவதாக இருந்த ரவிராஜ், அந்தக்கட்டுரை பற்றிக்கேள்விப்பட்டதும் கணேசலிங்கத்துக்காக ஆஜராவதைத் தவிர்த்துக்கொண்டார் என்று இலங்கையிலிருந்த நண்பர்கள்மூலம் கேள்விப்பட்டேன்.

அவர் வாழும் இக்கட்டான சூழ்நிலையில் எத்தனையோ மிகவும் சிக்கலான வேலைப்பாடுகளில் அவர் பங்கெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டாலும் தனது மனச்சாட்சிக்கு மரியாதை கொடுத்து, அபலைப்பெண் யோகேஸ்வரியின் வழக்கிலிருந்து அவர் வெளியேறியதற்கு யோகேஸ்வரி என்ற பெண்ணுக்கு நீதி கேட்டுப்போராடிய அத்தனை பெண்களும் திரு ரவிராஜ் அவர்களைப்பாராட்டினார்கள். இலங்கையில் சிறு குழந்தைகளைப்போர்முனைக்குக் கடத்துவது பற்றியும் அவர் குரலெழுப்பினார் என்று கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தோம். இவர் மரணத்தால் துயருறும் அவரின் குடும்பத்தின் வெறும் வார்த்தைகளாற் சொல்லும் அனுதாபங்கள் போதாது. திரு ரவிராஜின் மரணத்திற்குத் தனது மனமார்ந்த துயரைத் தெரிவித்திருக்கிறார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ. இக்கொலை சம்பந்தமான விசேட விசாரணைக்கு இங்கிலாந்திலிருந்து, ஸ்கொட்லாந்த் யார்ட் நிபுணர்களை அழைப்பதாகவும் பத்திரிகையிற் படித்தேன்.

அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரான கதிர்காமரையே கொலைசெய்தவர்களைக் கண்டுபிடிக்க முடியாத, சமாதான குழுவில் வேலைசெய்த மனிதாபியான கேதீஸ்வரனின் மரணத்துக்குக் காரணமாயிருந்தவர்களைக் கண்டுபிடிக்காத நிபுணத்துவம் இந்த விசாரணையில் எப்படி வேலை செய்யும் என்றிருந்து பார்க்கலாம். பாராளுமன்ற வாதிகளான திரு ரவிராஜ், சமாதானவாதி கேதீஸ்வரன் போன்றோரின் போன்றோரின் கொலைகளை அரசாங்கம் பொறுபெடுக்கவேண்டும் . தமிழ்த் தலைவர்களைப் பாதுகாக்க அதி திறமையான,உண்மையான பாதுகாப்பு நிர்வாகம் செயற்பட்டால் இக்கொலைகள் தொடருமா என்பதும் ஒரு கேள்வியாகும்.

தமிழ்த்தலைவர்களில் ஒருத்தரான ரவிராஜின் மரணம் அரசாங்கத்தின் இழப்பல்ல. இலங்கைத்தமிழர்களின் இழப்பாகும்

இப்படி எத்தனையோ நல்ல பண்புகள் உள்ள ஒரு தமிழ் மகனைச் சுட்டு விட்டவர்கள் நல்லதொரு சமூகநலவாதியை அழித்துவிட்டார்கள். இப்படியே, படித்த ஒரு சமூகத்தை அழித்துக்கொண்டுபோனால் எங்கள் சமூகத்தில் எஞ்சியிருக்க ப்போகிறவர்கள் கொலைகாரர்களும் திருடர்கள் மட்டும்தான்.

இதுதான் இலங்கைத்தமிழர் கனவு காணும் புதிய பூமியா?

# தேவை சம உரிமை, அனுமதிச்சலுகை அல்ல

# பெண்களும் அச்சகராகலாம்

சாத்திரம், சடங்கு, சம்பிரதாயம் ஆகியன அடிப்படையில் பொது அமைப்புகளுக்குள் ஒரு சில பிரிவினரை நுழைய விடாமல் தடுப்பது என்பது நமக்குப் புதிதல்ல. மதம், சாதி, பாலினம் சார்ந்து இந்தப் பாரபட்சம் கோவில்கள் உள்ளிட்ட பொது வெளிகளில் பல விதங்களில் செயல்பட்டு வருகிறது. சமத்துவம், சமூக மாற்றம், அறிவியல் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட பல சிந்தனையாளர்களும் சீர்திருத்தவாதிகளும் இவை போன்ற பாரபட்சங்களுக்கு எதிராகப் போராடி வருகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களை ஆலயங்களுக்குள் அனுமதிப்பதற்காக காந்தியடிகள் எடுத்த முயற்சி இதற்கு ஓர் உதாரணம்.

எந்த வழிபாட்டுத் தலமும் சமத்துவத்தை மறுக்க முடியாது. சபரிமலையிலும் பெண்கள் அனுமதி மறுப்பைச் சில பிரத்தியேகமான சமயக் காரணங்கள் காட்டி நியாயப்படுத்திவிட முடியாது. கோயில் சம்பிரதாயங்கள் காலம் தோறும் மாறி வருவதையும் கோவிலுக்கு நெருக்கமானவர்களின் விருப்பம் சார்ந்து நெகிழ்வடைவதையும் வரலாறு பதிவு செய்திருக்கிறது. 40 நாள் கடும் விரதம் என்ற அளவுகோல் போகும் வழி விரதம் என்னுமளவுக்கு மெலிந்திருப்பதைப் பார்க்கிறோம். போதைப் பொருட்களை நாடக்கூடாது என்பது விரத விதிகளில் ஒன்று. ஐயப்பமார்களுக்கு தனி கிளாசில் சாராயம் வழங்கப்படுவது தமிழக கேரள சாராயக் கடைகளின் நடைமுறைகளில் ஒன்று. கடும் பிரம்மச்சரியம் அனுட்டிக்க வேண்டும் என்பது விரதத்தின் இன்னொரு விதி. இது கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய எந்த ஏற்பாடும் இல்லை. மீறல்களும் தடுமாற்றங்களும் மாற்றங்களும் மலிந்த இந்தச் சம்பிரதாயங்கள் பெண் பக்தர்களுக்காக ஏன் நெகிழக் கூடாது.

மாதவிலக்கு மட்டும் தான் பிரச்சனை என்றால் மாதவிலக்கு நாட்களில் வரக்கூடாது என்ற விதியை மட்டும் உருவாக்குவதை விட்டுவிட்டு பெண்களே வரக்கூடாது என்று சொல்வது என்ன நியாயம்? ஆண் பக்தர்கள் விசயத்தில் பிரம்மச்சரியம் என்னும் விதியை எப்படி அவர்களது மனச்சாட்சிக்கு விட்டுவிடுகிறார்களோ அது போலவே இதையும் பெண் பக்தர்களின் மனச்சாட்சிக்கு விட்டுவிட வேண்டியது தான்.

இது ஒரு புறம் இருக்க அறிவியல் வெளிச்சம் படாத ஆதி நாட்களில் மாதவிலக்கு உள்ளிட்ட பல இயற்கையான நிகழ்வுகள் குறித்து எழுந்த அச்சம் மற்றும் அருவருப்பு காரணமாக உருவான பல அணுகு முறைகள் இன்று மாறிவிட்டன. இந்நிலையில் மாதவிலக்கை தீட்டு என்றும் ஒதுக்க வேண்டிய காலகட்டம் என்றும் பார்க்கும் அணுகுமுறைகளை மாற்றிக் கொள்வது தான் அறிவியல் அணுகுமுறையாக இருக்க முடியும்.

மறுக்கப்பட்ட உரிமைகளை வழங்குவது மட்டுமின்றி முழுமையான சமத்துவத்தை உறுதி செய்வதே ஜனநாயகப் பண்பு. எனவே வழிபாட்டுத் தலங்களில் பெண்களுக்கான தடைகளை நீக்குவதோடு நில்லாமல் உரிய பயிற்சி கொடுத்து அவர்களைப் பூசாரிகள் ஆக்குவதற்கும் வகை செய்ய வேண்டும். எனவே அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்னும் சட்டத்தைப் பிறப்பித்துள்ள தமிழக அரசு பெண்களும் அர்ச்சகராகலாம் என்பதாக அதை நீட்டிக்கொள்ள வேண்டும். (நன்றி: காலச்சுவடு - ஆகஸ்ட் 2006)

## அமீர் நினைவுச் சொற்பொழிவு

ஓகஸ்ட் 28ல் அமீர் நினைவுச் சொற்பொழிவு லண்டன் இந்தியன் வை.எம்.சி.ஏ இல் நடைபெற்றது. இந்தியாவில் இருந்து வந்திருந்த குமரி ஆனந்தன், ஆன்றூ லவ், ஆனந்தசங்கரி என்பவர்கள் உரை நிகழ்த்தினர். ஆன்றூ லவ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். Dr நிக்கலஸ்பிள்ளையின் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் 200ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

Dr சிறினிவாசன் மங்கள விளக்கை ஏற்றிவைத்தார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. பின்பு Dr பாலா, சட்டத்தரணி பஷீர், வாகீஸ், ஆய்வாளர் சிவலிங்கம், திருமதி மங்கையற்கரசி



ஆகியோர் உரையாற்றினர். குமரி ஆனந்தன் பேசுகையில் இலங்கை மக்களின் இன்னல்களை தான் கருணாநிதிக்கும் சோனியாகாந்திக்கும் தனிப்பட்ட முறையில் விளக்கி அவர்கள் மூலம் இலங்கை இனப்பிரச்சனையை தீர்க்க உதவுவதாக உறுதியளித்தார். ஆன்றூ லவ்வும் பாராளுமன்றத்தில் இலங்கை இனப்பிரச்சனையை எடுத்துச் சொல்வதாக கூறினார்.

## ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள்

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்திய ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள் நூல் வெளியீட்டு விழா செப்ரம்பர் 23ல் நடைபெற்றது. டோற்முன்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் எழுத்தாளர், திரைப்பட வசன கர்த்தா பவால் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வையொட்டி சர்வதேச புராதண நாணயங்கள், முத்திரைகள், பத்திரிகைகளின் கண்காட்சியும் இடம்பெற்றது. மௌன அஞ்சலி, தமிழ் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை, நூல் அறிமுகம், எழுத்தாளர் கௌரவிப்பு, பிரதமவிருந்தினர் உரை என வழமையான அம்சங்களும் நிகழ்வின் இறுதியில் பெண் கவிஞர்களின் கவி அரங்கும் இடம்பெற்றது.

LOCAL COMMUNITY HOUSING FINANCIALSERVICES
*Are youhaving problems getting a mortgage (Mortgage Declined? We can help)*



No Income Proof
CCJs* Defaults Up To %95
Loan / Mortgage Arrears
100% Mortgage Available
Self Certificate Available (Up to 90%) LTV
Self Employed or Employed
Discharged Baknrupts
Council RTB 100% (Inc. adverse)
Buy to let or let to buy
Buy to let foreign nationals
Commercial Mortgage arranged
Secure loans
Principle offer within 24hrs (subject to status)
All type of property Insurance Available

FOR AN IMMEDIATE DECISION CALL THE MORTGAGESPECIALIST ON
Tel: 020 8980 2121
Mob: 07956 914 735

Fax: 020 8980 8966 email:thiruprabaharan@hotmail.com
Consultation ask for Mr. Prabaharan 153/159 Bow Road, London E3 2SE
Your home is at risk if you do not keep up payment on a mortgageor other loan secured on it

LINGA & CO
LEGAL ADVISERS AND COMMISSIONERS FOR OATHS
T. 020 8544 9285 F. 020 8542 9530

→ உங்களுக்கு பிரித்தானியாவில் வசிக்கும் அல்லது வேலைபார்க்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதா?
→ திருப்பி அனுப்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?
→ நீங்கள் பிரித்தானியாவில் தொடர்ந்து சட்டப்படி வசிக்க விரும்புகிறீர்களா?
→ அப்படியாயின் பல வழிகள் உண்டு

உடன் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.

12 ஆண்டுகால அனுபவமுள்ள முன்னணி குடிவரவுச் சட்ட நிறுவனத்திடம் இருந்து நிறுவனத்திடம் இருந்து உங்கள் குடிவரவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். இதில் நாம் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட பெரும்பாலான நுழைவு விண்ணப்பங்கள் - மேன் முறையீடுகள் உள்துறை அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

We specialise in
Asylum and Immigration matters, Human Rights Application, Appeals, Detentionand Bail, Entry clearance application and appeal, Immigration, Judicial Review, Work Permits, EEA Application (Sponsor relative), Student visa, Highly Skilled Migration Program, Naturalisation Application,

46 High Street, Collieswood, London SW19, Emergency Line: 077 7164 6441

MARKANDAN & UDDIN SOLICITORS
SOLICITORS AND ADMINISTRATORS FOR OATHS
M. MARKANDAN LLB A. UDDIN LLB (Hons) MA.LLM PhD-RFL



- Last Will
- Power of Attorney
- Sponsorship Declarations

Contact:

| | |
|---|---|
| M MARKANDAN | 07956 386 576 |
| UDDIN | 07957 455 670 |
| KURUP | 07748 764 079 |
| GILBERT | 07946 318 470 |
| MAHENDRAN | 07881 650 472 |
| MATHU | 07830 285 634 |
| JASOKUMAR | 07961 996 482 |
| SONG | 07952 769 656 |
| SHIYAM | 07793 134 335 |

Markandan & Uddin Solicitors
Tamil House, 720 Romford Road, London, E12 6BT
Tel: 020 8514 8300 / 07830285 634
Fax: 020 8514 8381

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

# சிரித்திரன் சுந்தர் - ஈழத்தமிழரின் கருத்தோவியக்கலையின் முன்னோடி

- என். செல்வராஜா -
(நூலகவியலாளர்)

காலத்தை வென்றுவாழும் கார்ட்டூன் எனப்படும் கருத்தோவியங்களைத் தந்த சிரித்திரன் எஸ். சிவஞானசுந்தரத்தை ஈழத் தமிழ் உலகம் எளிதில் மறந்து விடமாட்டாது. 1996 மார்ச் மாதம் 3ம் திகதி தனது சொந்தக் கிராமமாகிய கரவெட்டியில் தனது 72வது வயதில் அமரத்துவம் அடைந்த இந்த மாமனிதர் வாழும்போது அவர் சிந்திக்கச் சிந்திக்க தமிழ் மக்கள் சிரித்தனர்.

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் கொலட் சிறந்த கருத்தோவிய மேதையாக விளங்கினார். அந்நாட்களில் இலங்கை அரசியல்வாதிகள் பாம்பைக்கண்டுஞ்சுவது போல தேசியப் பத்திரிகைகளில் வெளியாகும் கருத்தோவியர் கொலட்டின் கேலிச்சித்திரங்களைக்க கண்டு மிகவும் அஞ்சினார்கள். சேர். ஜோன் கொத்தலாவலை தன்னைக் கிண்டல் செய்து பிரசுரமான கேலிச்சித்திரப் படைப்புக்களை பத்திரிகையாளர்களிடம் பெற்றுத் தன் அலுவலகத்தின் சுவர்களில் கட்டமிட்டு மாட்டிவைத்திருந்தார்.

இந்த அங்கதச்சுவை கொண்ட கருத்தோவியங்களை தமிழகத்தில் மாலி என்ற அபூர்வ கருத்தோவியர் ஆனந்தவிகடன் வாயிலாக தமிழர்களிடையே பரவவிட்டார். இவரது அடியொற்றி, இக்கலை சாமா, தானு, ஶ்ரீதர், கோபுலு, மதன் என்று பல தமிழகத்து ஓவியர்களின் கரங்களுக்கூடாக நளினம் பெற்று பின்னாளில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றிருந்தது.


இந்நிலையில் எமது தாயகத்தில் இக்கலையைத் தன் வாழ்வாகக் கொண்டு வாழமுற்பட்டவரே அமரர் சிவஞானசுந்தரம். இந்திய சுதந்திரப் போராட்டக்காலத்தில் இந்தியாவில் கல்வி கற்பதற்காகச் சென்று சிலகாலம் வாழ்ந்த அவர், அங்கு வாழ்ந்த காலகட்டம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக்காலமாகும். அக்காலத்தில் BLITZ பத்திரிகைக்கு ஒரு கருத்தோவியத்தை வரைந்து அனுப்பினார். பிரித்தானியப் பிரதமர் சர்ச்சிலும் ஹைதராபாத் நிசாம் மன்னனும் இந்தியாவுக்கு எதிராகச் சதியாலோசனை செய்யும் கார்ட்டூன் ஒன்றையே அவர் முதன்முதலாக வரைந்து அனுப்பியிருந்தார். அது BLITZ பத்திரிகையில் பிரசுரமாகி சிறுபணத்தொகையும் சன்மானமாக இவருக்குப் பெற்றுக்கொடுத்தது. இந்தியாவில் அக்காலகட்டத்தில் தேசிய மட்டத்தில் புகழ்பூத்த கார்ட்டுன் ஓவியர்களாக விளங்கிய சங்கர், ஆர்.கே.லட்சுமணன், அபு, பால் தக்கரே, போன்றோருக்கு மத்தியில் எம்மவரான சுந்தரும் தன் கருத்தோவியங்களால் அக்காலத்தில் பம்பாய் பத்திரிகைகளில் தன் கருத்தோவியங்களையும் உலவவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இந்திய வாழ்வை முடித்துக்கொண்டு சிவஞானசுந்தரம் அவர்கள் தாயகம் திரும்பியதும் தொடர்ந்தும் தன்னுள் இனங்காணப்பட்ட, இரண்டறக் கலந்துவிட்ட திறமையை இத்துறையில் வெளிக்காட்டத் தவறவில்லை.

இலங்கைப் பிரதமராக S.W.R.D.பண்டாரநாயக்கா பதவியேற்றபின் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றய சந்தர்ப்பத்தில் சுந்தர் வரைந்த கருத்தோவியம் சுதந்திரனில் வெளியானது. அன்றைய பிரதமர் பண்டாரநாயக்கா ஒரு கல்லின்மேல் அமர்ந்திருந்து சிங்களம் மட்டும் என்ற மெட்டை புல்லாங்குழல் வழியே வாசிக்கிறார். அந்தச் சிங்களம் மட்டும் என்ற இனவாத இசை புல்லாங்குழல் வழியே ஒரு பாம்பாக விரிந்து, எதிரே உள்ள ஒரு தமிழ்ப்பெண்ணின் முன்னால் சீறிப்படமெடுத்தாடுகின்றது.

இந்தக்கருத்தோவியம் சுதந்திரனில் பிரசுரமாகி சில நாட்களின் பின்னர் வரலாற்றில் வடுவாகப் பதியப்பெற்ற பாரிய இனக்கலவரம் இலங்கையில் வெடித்தது. அதன்பின்னர் சோகத்தில் புதையுண்ட தமிழரின் வாழ்வில் ஒரு சில நிமிடங்களையாவது துடைத்தெறியலாம் என்ற நோக்கில் அன்றைய காலகட்டத்தில் தினகரன் பத்திரிகையின் வாயிலாக, அப்போது தினகரன் ஆசிரியராக இருந்த கைலாசபதி அவர்களின் ஆதரவுடன் இவரது தூரிகைகள் செயற்பட ஆரம்பித்தன. சவாரித்தம்பர் என்ற அந்த அழியாத கார்ட்டூன் கதாபாத்திரம் உருவான வரலாறு இதுவாகும். ஈழத்தமிழரின் கேலிச்சித்திரக்கலை வரலாற்றில் சவாரித்தம்பர் என்றும் இருப்பார். சவாரித் தம்பரைத் தொடர்ந்து சிவஞானசுந்தரம் அவர்களின் பாத்திரங்களின் படைப்புகள் சின்னக்குட்டி, மைனர் மச்சான், மிஸ்டர் அண்ட் மிசிஸ் டாமோடிரம், மகுடியார், மெயில்வாகனத்தார், ஶ்ரீமான் செல்லக்கிளி, வேலரும் மயிலரும் என்று மானிடநேயமும் சமூகநோக்கும் கொண்ட கற்பனைப் பிறவிகளாக வளர்ந்துகொண்டே சென்றன.

மைனர் மச்சான் என்ற பாத்திரம் சமகால, படித்த வேலையற்ற ஈழத்து இளைஞன் ஒருவனின் உருவகமாகும். அரசாங்கக் காரியாலயப்படிகளில் ஏறி இறங்கி வேலை காலி இல்லை என்ற கதவடைப்புகளைத் தரிசித்தும் மனம்தளராமல் வாழ்பவர். காதலுக்குத் தூண்டில் போடுவார். அதிலும் மைனர் மச்சானுக்கு அதிர்ஷ்டம் கிட்டாது. தொடர்ந்தும் நம்பிக்கை ஒளியுடன் தொடர்வார். சோகம் சுடும் வேளையில் மதுபானத்தை நாடுவார். இந்தப் பின்னணியில் மைனர் மச்சானின் பாத்திரப்படைப்பு அமைந்திருந்தது.




மிஸ்டர் அண்ட் மிசிஸ் டாமோடிரம் பாத்திரம் சற்று வித்தியாசமானது. பிறப்பால் தமிழ் இனத்தவராயினும் இத்தம்பதியினர் ஆங்கில மோகத்தில் அலைபவர்கள். அடுக்களை மொழிகூட அவர்களுக்கு ஆங்கிலமாகவே இருந்தபோதும் அவர்கள் தமிழ் கலாச்சாரத்தில் அதீதமாக அக்கறை காட்டினார்கள். தமிழ் கலை கலாச்சாரங்கள் பற்றி மிசிஸ் டாமோடிரன் எழுப்பும் வினாக்களுக்கு மிஸ்டர் டாமோடிரன் தானே தமிழ்க்கலாச்சாரத்தின் பாதுகாவலர் போன்று பதிலிறுப்பார். ஒருதடவை மிசிஸ் டாமோடிரன் கேள்வி எழுப்புகின்றார். கடைச்சங்கம் என்றால் என்ன என்று. மிஸ்டர் டாமோடிரன் பதிலளிக்கிறார். அது சங்கக் கடைச்சங்கம் என்று. இது தான் அவர்கண்ட சங்ககாலத் தமிழ்ச்சங்கம்.

அமரர் சிவஞானசுந்தரம் மண்வாசனை இலக்கியமாக கருத்தோவியங்களை ஈழத்தமிழருக்குத் தரவேண்டும் என்ற வேணவாவில் கருக்கொண்டு உருவாக்கியதே "சிரித்திரன்" என்ற மாதப்பத்திரிகையாகும். "செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்" என்ற பதாதையுடன் இவரது சிரித்திரன் சஞ்சிகை 1965இல் கொழும்பில் பிரசுரம் கண்டு பின்னாளில் யாழ்ப்பாணத்துக்கு இடம்மாறி 1987இல் இந்திய இராணுவ அடக்கு முறைக்கு முகம்கொடுக்கும் வரை பல ஆண்டுகள் ஈழத்துத் தமிழ்மக்களின் கரங்களில் தவழ்ந்து அவர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் செய்து வந்துள்ளது. சிரித்திரன் கார்ட்டூன் படிமங்கள் ஆக்க இலக்கியத்தைப் போன்று காலத்தின் கண்ணாடியாகவும், மண் வாசனையுடனும் அமைந்துள்ளன. அதேவேளை, பல கருத்தோவியங்கள் காலத்தையும் மேவி வாழும் தன்மையுடையனவாகக் காணப்படுகின்றன.

கார்ட்டூன் கலைஞர்களை கேலிச்சித்திரக்காரர்கள் என்றும் அழைத்து வந்தோம். சிரித்திரன் சுந்தர் இந்தப் பதத்தை எள்ளளவும் விரும்பியவரல்ல. கேலிச்சித்திரம் என்பது புனிதமான அந்த ஓவியக்கலையின் ஒரு பண்பைக் கொச்சைப்படுத்துவதாகும் என்று அவர் அடிக்கடி கூறியும் எழுதியும் வந்திருக்கின்றார். கருத்தோவியங்கள் என்ற பதம் ஓரளவு அவரது ஓவியங்களுக்கு அண்ணளவாக ஒத்து வருகின்றது. கார்ட்டூன் என்ற ஆங்கிலப்பதத்தையே அவர் எப்பொழுதும் பிரயோகித்து வந்திருக்கிறார்.

சிரித்திரன் சுந்தரின் கருத்தோவியங்கள் முழுவதும் இதுவரை ஆவணப்படுத்தப்படவில்லை. பல்வேறு நூல்களிலும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஆங்காங்கே பரவிக்கிடக்கும் அமரர் சிவஞானசுந்தரத்தின் கருத்தோவியங்கள், மற்றும் அவரது படைப்புக்களை தேடித்தொகுத்து முழுமையானதொரு பதிப்பாகக் கொண்டுவரும் வரலாற்று முயற்சியினை லண்டனில் மேற்கொண்டு வருவதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. இலண்டனில் தற்போது வாழும் கலாநிதி கனக சுகுமார் இம்முயற்சியில் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு வருகின்றார். இவரது பணிக்கு உதவக்கூடிய எவரும் இத் தொகுப்பு முயற்சியையிட்டு உதவவேண்டும்.

# தரக்குறைவான செய்திகளும் தனிநபர்களுக்கு எதிரான தாக்குதல்களும்

- த ஜெயபாலன் -

தமிழ் இணைய ஊடகங்கள் ஹைஉ-ரெக் குப்பைத்தொட்டிகளாகி வருகின்றன. இணையத் தளங்களின் வளர்ச்சி தகவல் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்க தமிழ் இணையத் தளங்கள் தனிநபர் வக்கிரங்களையும் பாலியல் வக்கிரங்களையும் தீர்த்துக் கொள்ளும் தளமாக மாறியுள்ளது. இத்தளங்களை நடத்துபவர்களும் அதில் எழுதுபவர்களும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் தலைமறைவில் இருந்து தங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ள முடிகிறது. ஒரு ஊடகம் எப்படிச் செயற்படக் கூடாது என்பதற்கு இந்த இணைய ஊடகங்கள் சாட்சியாக அமைகின்றன. பண்பட்ட பாரம்பரியம் மிக்க தமிழ் சமூகத்திலிருந்து இவ்வாறான மூன்றாம் தர ஊடகங்களின் தோற்றம் தமிழ் சமூகம் தன்னை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தி உள்ளது.

அரசியல் கருத்துக்களும் அரசியல் விவாதங்களும் கருத்துக்களால் விவாதிக்கப்படாமல் தனிநபர்கள் மீதான தாக்குதல்களாக தொடர்வதும் அத்தனிநபர்கள் பற்றிய புனையப்பட்ட கதைகளே செய்திகளாவதும் அத்தனிநபர்களின் உறவுகளைப் பற்றியும் அச்செய்திகள் விரிவதும் புலம்பெயர் சுழலின் யதார்த்தமாக உள்ளது. கருத்துக்களைக் கருத்தக்களால் மோத முடியாமல் கருத்தை முன்வைத்தவரின் மனைவியையும் அவரின் பிள்ளைகளையும் வலிந்து இழுத்து கேவலப்படுத்தும் போக்கு இந்த இணைய ஊடகங்களில் மலிந்து காணப்படுகிறது. பெரும்பாலும் இந்த கீழான தாக்குதலை தொடுப்பவர்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்களாகவும் முன்னர் நண்பர்களாகவும் இருந்தவர்கள் என்பதே உண்மை. இவர்கள் மற்றவர்கள் என்ன கருத்தை கொண்டுள்ளனர் என்பதிலும் பார்க்க இவர்களிடையே உள்ள தனிநபர் முரண்பாடுகளே முக்கியமாக அமைகிறது. அவர்களுடைய அரசியல் இரண்டாம் பட்சமானதே.

மற்றையவர்களுடைய பேச்சு, எழுத்து, கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் நாம் இலங்கையில் எமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாகக் கூறி அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நாடுகளில் அரசியல் தஞ்சம்பெற்று வாழுவது வேடிக்கையானதே. இலங்கையில் 3 மில்லியனுக்கும் அதிகமான தமிழர்கள் வாழ்ந்தால் 3 மில்லியனுக்கும் அதிகமான கருத்துக்கள் இருக்கும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கைத் தமிழர்கள் சிறிய சமூகமாக இருந்தாலும் அவர்கள் அரசியல் ரீதியில் மிகவும் முனைப்படைந்தவர்களாக உள்ளனர். அவர்களிடையே பல்வேறுபட்ட அரசியல் கருத்துக்கள் உள்ளது. அவ்வாறான மாறுபட்ட அரசியல் கருத்தை கொண்டிருப்பது அவர்களது குற்றமல்ல. ஆனால் அதை ஏற்றுக்கொள்ள மறுப்பது ஜனநாயக விரோதம்.

இணைய ஊடகங்கள் சம்பந்தப்பட்டவரின் கருத்தை முன்னிலைப்படுத்துவதில்லை. மாறாக அவருக்கும் எழுதுபவருக்குமிடையேயான தனிநபர் போட்டிகள், பொறாமையை அவருடைய கருத்துடன் செருகி தனிநபர் தாக்குதலையே மேற்கொள்கின்றனர். அதன் மூலம் கருத்துக்களை முன் வைப்பவரையும் அவரது குடும்பத்தினரையும் அவமானப்படுத்துவது, கேவலப்படுத்துவது போன்ற கீழ்தரமான அரசியலை மேற்கொள்கின்றன. உலகின் வெவ்வேறு பாகங்களில் இருந்து இந்த இணைய ஊடகங்களை நடத்துபவர்களும் அதில் எழுதுபவர்களும் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே. அதில் எழுதுபவரும் விமர்சனத்திற்கு உள்ளாகுபவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்களாகும் முன்னர் நண்பர்களாகவும் இருந்தவர்களே. இவர்கள் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்றால் தப்பில்லை.

இவர் அவரைப் பற்றியும் அவரது மனைவி பிள்ளைகளைப் பற்றியும் ஒரு இணையத்தளத்தில் எழுத பதிலடியாக அவர் இவரைப் பற்றியும் இவரது மனைவி பிள்ளைகளைப் பற்றியும் இன்னொரு இணையத்தளத்தில் எழுதுவார். எழுதிவிட்டு இருதரப்பும் இணைய அஞ்லில் அனுப்பியும் தொலைபேசியில் அழைத்தும் தம் கெட்டித்தனத்தை பரப்புவார்கள்.

பொம்பிளைக் கள்ளன், gay, கிறடிட்காட் போடுபவன், றோ உளவாளி, கள்ளன், தேசத்துரோகி, ஒட்டுக்குழுவைச் சேர்ந்தவன், ரவுடி, தூள்காறன், .......... என்று இந்தக் குற்றச்சாட்டுகளில் ஒன்றை உங்களுக்கு பிடிக்காத ஒருவர் மீதும் போட்டு நீங்களும் அவரைப் பழிவாங்கலாம். கொஞ்சம் தமிழ் ரைப்பிங் தெரிந்து இன்ரநெற்றும் இருந்தால் உங்கள் எதிரிகள் மீது நீங்களும் வசைபாடலாம். கடந்த கால்நூற்றாண்டு கால விடுதலைப் போராட்டம் வேலிச்சண்டையை இன்ரநெற்றில் பிடிக்குமளவுக்கு தமிழ் சமூகத்தை வளர்த்து இருக்கிறது.

இந்த இணைய ஊடகங்கள் முகவரியற்றவை. முகம் தெரியாதவை. இவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கமுடியாது. அதனால் அவை சமூகப்பொறுப்புடன் நடந்துகொள்வதில்லை. அவை வெளியிடும் செய்திகளில் உண்மை இருப்பதுமில்லை. அதனால் இந்த இணையத் தளங்களை புறக்கணிப்பதே ஆரோக்கியமான விடயம். ஆனால் மறுதலையாக ஈழமுரசு போன்ற பொறுப்பான பத்திரிகைகளும் இந்த வலைக்குள் வீழ்வது மிகவும் ஆரோக்கியமற்ற சுழலையே ஏற்படுத்தும்.

AMEN SOLICITORS
SOLICITOR AND COMMISSIONERS FOR OATHS
(formerly known as Nathan & Linga)

We offer a specialised and friendly service in the following areas of law
* Immigration and Nationality
* Human Rights
* Judicial Review
* Civil Litigation
* Criminal Litigation
* Injunction
* Traffic Offences
* Conveyancing (Residential & Commercial)
* Family Law
* Employment Law
* Mental Health
* Liquor licensing
* Landlord and Tanent

Also, we offer our quality legal service inthe following languages
* Creole * English * Italian * Malay * Nepalese * Sinhalese * Tamil
* Chinese * French * Hindi * Mandarin * Funjabi * Spanish * Urdu

4 Amen Corner, Tooting,
London SW17 9JE
General Line: 0208 682 7720
Emergency Line: 0777 164 6441
Fax: 0208 767 1412

MARKANDAN & CO SOLICITORS
அரசியல் தஞ்ச விடயங்கள், பிரித்தானிய பிரஜாவுரிமை
விவாக விண்ணப்பங்கள், வீதிப் போக்குவரத்து வழக்குகள்,
Bankruptcy Problems,
Cafe அனமதிகள் யாவும் ஒரே கூரையின் கீழ்.
**Last will & Probate, House flat sale, Re-mortgages,**
**Highly skilled migration, Sponsorship,**
**Power of Attorney, Work permet application, Civil Litigation.**
020 8514 8188
845 Romford Rd, Manor Park, London E12

NP solicitors
- Immigration matters
- Work permits, HSMP, SBS
- All entry clearance issues
- Appeals, ECO to High Court etc
- All Home Office applications
- 10 Asian languages spoken
Commissioners For Oaths
171 Hanworth Road, Hounslow,
Middlesex TW3 3TT - UK
Tel: 020 8577 7799 Fax: 020 8577 9788
e-mail: npsolicitors@yahoo.co.uk
www.npsolicitors.com
Saturdays by Appointment
THIS FIRM IS REGULATED BY THE LAW SOCIETY

RASIAH & CO.
Solicitors
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
020 8543 4040
020 8543 2400
180A Merton High Street, London SW19 1AY

GARCHA&CO
Chartered Certified Accountants
For your accounting and Taxation needs, CALL:
Heasleigh House 79a South Road,
Southall, Middlesex UB1 1SQ
Tel: 020 8843 1816 020 8843 9010
Fax: 020 8813 8249

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

JAY VADHER&CO
SOLICITORS
AND NOTARY PUBLIC
Jay Vadher and Rajay Vadher
Partners
Asst. Solicitor - Ruby Moreea
Notary Public - Roger Hart
We specialise in commercial & residential property conveyancing, wills,probate and family law.
For asistance please contact us at
Victoria House, 185 Romford Road, Stratford, London E15 4JF
Tel: 020 8519 3000 DX 52106 Forest Gate Fax: 020 8519 3300
E-mail: j.vadher@jayvadher.co.uk E-mail:r.vadher@jayvadher.co.uk

JANI TAYLOR ASSOCIATES
- Expert Witness
- Forensic Accounting
- Litigation Support
- Tax Investigations
Office 6A, Popin Business Centre
Southway, Wembley, Middlesex HA9 0HF
T: 020 8795 3429 F: 020 8795 3318
rajni@janitaylor.co.uk

David Shine & Kharhanda Solicitors
Divorce, Litigation,
Wills Probate,
CONVEYANCING
MATRIMONIAL & FAMILY
Also Landlord & Tenant Cases
See us Now
020 8571 6001 / 2
Southall

MR K CHELVA-NAYAGAM LLB
SOLICITORS
(Former principal of Natham & Chelva)

Has now joined
as a solicitor with
Srinivasans Solicitors at
169 Tooting High Street
London SW17 0SY
Tel: 020 8767 1151 Fax: 020 87671388
Contact him for all your legal matters in particular Commercial& Residential Conveyances, Family Proceedings, Civil Litigation & Immigration. He always works for clients' interest & takes more x care in dealing with his clients' matters.

Khosla & Co.
Chartered Certified Accountants
For your Accounting and Taxation needs
Call
Tel: 020 8548 8899
Fax: 020 8548 8846
412 Katherine Road
London E7 8NP

# லண்டன் தமிழ், முஸ்லீம் மக்களுடன் ஜனாதிபதியின் ஒரு மணி நேரம்



சென்ற மாதம் 24ந்திகதி சனிக்கிழமை இலண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் விசேட அழைப்பின் பேரில் தமிழ், முஸ்லீம் மக்களின் அரசியல் கட்சியினதும் ஏனைய மனித உரிமை ஜனநாயக அமைப்புக்களினதும் பிரதிநிதிகளை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் சந்தித்தார்.

இந்நிகழ்வில் பிரதானமாக தமிழ்மக்களின் சார்பில் ஜனாதிபதியுடன் இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டிருந்தார். புலம்பெயர் தமிழ்மக்களின் குரல்களை கேட்க வேண்டிய தேவையினை அவர் ஜனாதிபதிக்கு வற்புறுத்தியதைத் காணமுடிந்தது. ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், டெலோ, த.வி.கூட்டணி என பல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் மட்டுமல்லாது பத்திரிகையாளர்கள், சமாதான செயற்பாட்டாளர்கள், சமூக சேவையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் ஜனநாயக காங்கிரஸின் தலைவர், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு நிக்கலஸ்பிள்ளை, வைத்தியகலாநிதி பாலா, திரு தம்பா போன்றோர் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதினை வலியுறுத்திப் பேசினார்கள். குறிப்பாக ஜெயதேவன் அவர்கள் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தினை அமுல்படுத்தி மாகாணசபை நிர்வாகத்தினை தற்காலிகமாக அமுல்படுத்தக்கூடிய வாய்ப்புண்டா அல்லது நிரந்தர சமாதானத்திற்கான செயற்பாட்டினை வழங்கும் அரசியல் தீர்வினை தாமதிக்காது அரசு கொண்டு வரவேண்டியதற்கு ஜனாதிபதி என்ன செய்ய விரும்பகிறார் என்பதினை வெளிப்படுத்துமாறு கேட்டுகொண்டார்.

திருமதி அமிர்தலிங்கம் அவர்கள் மிகவும் உணர்வுபூர்வமாக தமிழர் அனுபவித்த துயரங்கள் போதும் உடனடியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வினை வழங்க ஆவண செய்ய வேண்டும் எனவும், நிக்கலஸ்பிள்ளை அவர்கள் ஜனாதிபதியின் அர்பணிப்புக்குறித்தும், தாமதம் குறித்தும் கடந்தகால கசப்பான அனுபவங்கள் குறித்தும் கேள்வியெழுப்பினார்.

தமிழர் சமாதான மன்றம் சார்பில் வைத்திய கலாநிதி பாலா அவர்கள் ஒரு அறிக்கையினை வாசித்து ஜனாதிபதியிடம் சேர்ப்பித்தார். அவரது அறிக்கை நீண்டதாயினும் சாதாரண அடிமட்டத்திலிருந்து ஜனாதிபதியாகியிருக்கும் மகிந்த ராஜபக்ஷ தமிழ்மக்களிதும் மட்டுமல்ல சாமான்ய மக்களின் துயரங்களை புரிந்திருக்க வேண்டும் என்றும் ஏனைய ஜனாதிபதிகள் போலல்லாது உளசுத்தியுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வினை கொண்டு வரவேண்டும் அதற்கான தகுதி ஜனாதிபதியிடம் இருக்கிறது என தான் உளமார நம்புவதாக குறிப்பிட்டதுடன் ஒற்றுமையுடனும் கௌரவத்துடனும் தமிழர்கள் வாழ விரும்பவதாகவும் கௌதம புத்தரின் மனித விழுமியங்கள் குறித்த போதனையினை மேற்கோள் காட்டி உருக்கமான வேண்டுகோளை விடுத்திருந்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லீம் தகவல் நடுவத்தின் சார்பில் கலந்து கொண்டு பேசிய சட்டத்தரணி பஷீர் அவர்கள் இன்றைய முஸ்லீம்களின் இருத்தலைப் பாதித்த பொத்துவில் சம்பவம் குறித்து அரசபடைகள் மீது சாட்டப்படும் குற்றச்சாட்டினை ஜனாதிபதி எவ்வாறு கையாளப்போகிறார் என்றும் சுயாதீனமான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற வேண்டுகோளையும் அரசு மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையில் இருந்து தவறவில்லை என்பதினை நிரூபிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உரியதென்றும் குறிப்பிட்டார்.

இது குறித்து ஜனாதிபதி, ரவூப் ஹக்கீமின் அரசியல் லாபத்திற்குரிய குற்றச்சாட்டாகவும் தனக்குக் கிடைத்த செய்திகளின் பிரகாரம் அதிரடிப்படையினர் மேற்படி சம்பவத்தில் ஈடுபடவில்லை யென்பதையும் குறிப்பிட்டார். எது எவ்வாறாயினதும் அரசின் உடனடி நடவடிக்கைகள் குறித்து அறியக்கூடியதாகவிருப்பினும் சுயாதீனமான முறையிலான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதினை பஷீர் அவர்கள் வலியுறுத்தினார். நிச்சயமாக முறையான விசாரணை செய்யப்படும் என்பதினை ஜனாதிபதியும் அவரது உதவியாளர்களும் உறுதி செய்தனர். ஸ்ரீ.மு.தகவல் நடுவத்தின் சார்பில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையின் பிரதியினை இலங்கை உயர்ஸ்தானிகர் மூலமாக ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

தனிப்பட்டவகையில் கருத்துக்கள் கூறியவர்கள் அனைவருக் கும் பதிலளித்த ஜனாதிபதி தான் சர்வகட்சி மாநாட்டின் தீர்வினை நம்பியிருப்பதாகவும் ஜனாதிபதி என்ற வகையில் தனது தலையீடு எதுவுமின்றி சர்வகட்சி மாநாடு எட்டுகின்ற தீர்வினை மக்கள் முன் சமர்ப்பித்து ஆணை பெறவிருப்பதாகவும் தெற்கிலே ஒருமைப்பாடு காணாவிடின் எந்தத்தீர்வினையும் அமுல்படுத்துவது கடினம் அல்லது முடியாததொன்று என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.



தொகுப்பு: சையட் பஷீர்

இச்சந்திப்பு வெறுமனே பிரமுகர்கள் சந்திப்பாக அமையாமல் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழ், முஸ்லீம் மக்களின் புலம்பெயர் மக்கள் கொண்டுள்ள அக்கறையையும் நீதியானதும் நியாயமானதும் ஆன தீர்வு இனப்பிரச்சினையில் காணப்பட ஒத்துழைப்பு உண்டென்பதை வெளிப்படுத்தும் சந்திப்பாக இது நிகழ்ந்துள்ளது. கொழும்பில் இடம் பெறும் ஆட்கடத்தல், பலாத்கார பணப்பறிப்பு மற்றும் வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள தமிழ்மக்களின் அவலங்கள் என்பன குறித்து நாட்டின் தலைவர் என்கிற வகையில் ஜனாதிபதியின் பொறுப்பு குறித்தும் இவற்றிலிருந்து அவர் விலகியிருக்காத வகையிலும் அல்லது தப்பித்து கொள்ள முடியாததென்றும் அழுத்திக் கூறுகின்ற வகையில் காட்டமான கருத்துக்களும் கேள்விகளும் முன்னெடுக்கப்பட்டன. எனினும் நீண்ட பிரயாணத்தினால் களைப்படைத்திருந்த ஜனாதிபதி எவ்வளவு தூரம் இந்தப்பிரச்சினைகளை தமிழ் முஸ்லீம் மக்களின் அக்கறைகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும் என்பதினை இச்சந்திப்பு வலியுறுத்தியது.

ஜனாதிதியுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டார். கூடவே வந்திருந்த உதவியாளர்களில் ஒருவரின் மெய்மொழி கலந்து கொண்டோரை அதிருப்தியடையச் செய்திருக்கும் எனினும் ஜனாதிபதியுடனான சந்திப்பு தமிழ் ஜனநாயக புலம்பெயர் அமைப்புக்களின் பங்களிப்பினை சமாதானப் பேச்சவார்த்தைகள் உள்வாங்க வேண்டிய தேவை யினை ஜனாதிபதிக்கு இன்னும் அழுத்தமாக கூற வேண்டிய வாயப்பினை ஏற்படுத்தியிருக்கிறது என்பதனை தொடர்ச்சியான இத்தகைய செயற்பாடுகள்தான் நிர்ணயிக்கும். இச்சந்திப்பு இன்னும் சிறந்த முறையில் செய்யப்பட்டிருந்தால் திட்டவட்டமான ஒழுங்கமைக்கப் பட்ட நிகழ்ச்சிநிரல் நேர ஒழுங்கு என்பன கவனத்தில் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். தமிழர், முஸ்லீம், சிங்கள ஜனநாயக மனித உரிமை அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து புலம்பெயர் நாடுகளில் நீதியான சமாதானத்திற்கான ஆலோசனைகளில் பங்கு கொள்ள வேண்டிய அவசியத்தை உணர வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டிருக்கிறது.

**யோகாசனம் என்ற கலையை இந்தியாவில் பயின்று அதில் தேர்ச்சி பெற்ற ஜெயானி நிர்மலன், லண்டன் ஹரோ பகுதியின் தமிழ் பாடசாலைகளிலும் தனியார் அமைப்புக்களிலும் யோகாசனம் கற்பிக்கும் ஆசிரியையாக கடமை ஆற்றி வருகின்றார்.**

# ஜெயானி நிர்மலனுடன் சந்திப்பு



ஜெயானி - நவஜோதி

*நவஜோதி: உங்களுக்கு யோகக்கலையைக் கற்கவேண்டும் என்ற ஆர்வம் ஏன் ஏற்பட்டது?*

ஜெயானி:: கற்க வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டதால்தான் இக்கலையை பயின்றேன். சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் மூட்டுக்களும் மூட்டுக்கள் சார்ந்த தசைகளிலும் ஏற்பட்ட கடுமையான வலி வீக்கத்தினால் மிகவும் அவதிப்பட்டேன். இரண்டு வருடங்களாக லண்டனில் வைத்தியம் செய்துவிட்டு எனது நோய்க்கான மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று மருத்தவர்கள் கூறினார்கள். அந்த நேரத்திலே எனக்கு வீக்க மாற்று வில்லைகள் இன்றி என்னால் இருக்க முடியாது அவதிப்படும் நிலையே இருந்தது. ஆனாலும் மனம் தளராமல் என் கணவர் தந்த ஒரே நம்பிக்கையில் இந்தியா சென்று ஒரு தடவை முயற்சி செய்தேன்.

அங்கு மூட்டுக்கள் தொடர்பான நோய்களில் நிபுணுத்துவம் பெற்ற ஒரு வைத்தியரிடம் சென்றேன். அவர் என்னை பரிசோதித்த பின் சத்திரசிகிச்சை எதுவும் தேவையில்லை என்றும் யோகக்கலையை பயில்வதன் மூலமே நிரந்தரமான சுகத்தைப் பெறமுடியும் என்று கூறி என்னை யோகக்கலை பயிலும்படி கூறினார்.

பின் யோகக் கலையை பி.எஸ். சிறீசயிலபதி அவர்களிடம் கற்கும்போது உடலை அசைக்க முடியாத அளவுக்கு வலியும் வேதனையும் ஏற்படும். எனது குருவின் மனைவி எனக்கு நிறைய உற்சாகமும் ஆறுதலும் தந்து எனதருகில் இருந்து என்னை ஊக்கப்படுத்தி யோகக் கலையை பயில வைத்தார். தற்போது நான் சுகம் பெற்று நான்கு வருடங்களாக இக்கலையை மற்றவர்களோடு பகிர்ந்து ஒரு யோகக்கலை ஆசிரியையாக இருக்கின்றேன். முன் என்னுடைய இரத்தத்தில் உள்ள வெண்குருதிக் கலங்களின் எண்ணிக்கை 99 வீதம் இருந்தது. சாதாரணமாகப் பெண்களுக்கு 10 வீதம் தொடக்கம் 14 வீதத்திற்குள்ளாக இருக்க வேண்டும். இரண்டு வருடங்களாக குறைக்க முடியாத என்னுடைய இரத்த வெண்குருதிக் கலங்களின் விகிதத்தை யோகக்கலை மூலம் இரண்டு மாதங்களில் 11 விகிதமாகக் குறைக்க முடிந்தது.

*நவஜோதி: யோகாசனம் பயில்வதால் ஏற்படும் உள-உடல் நன்மைகள் என்ன ? இதனால் தீமைகள் உண்டா?*

ஜெயானி: ஒருவருடைய அமைப்பில் மூன்று வகையிலே யோகக்கலை நன்மைகளை ஏற்படுத்தும். முதலாவது உடலின் எல்லா அவயவங்களையும் சரியான முறையில் செயற்பட வைக்கின்றது. இதன்மூலம் சோர்வும் சோம்பலும் ஒழியும். உடலிலுள்ள நோய்களை நீக்கி உடலை அழகாக வைத்திருக்க உதவுகின்றது. உடலின் உறுப்புக்களை வீரியப்படுத்துகின்றது. உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்து ஆயுளை அதிகரிக்கச் செய்கின்றது.

இரண்டாவது மனோ ரீதியான நன்மைகளை ஏற்படுத்தும். அதாவது மனதிற்கு சாந்தி, சந்தோஷம், உற்சாகம் ஆகிய உணர்வுகளைக் கொடுத்து எதிர்மறை எண்ணங்களான கோபம், கவலை, தாழ்வுமனப்பான்மை, மன உளைச்சல், பயம் ஆகியவற்றிலிருந்து மனதை விடுவிக்கின்றது. மன உறுதி, மன ஒருமைப்பாடு, ஞாபக சக்தி, அறிவாற்றல் ஆகியவற்றை உங்கள் மனதிற்கு கொடுக்கின்றது.

மூன்றவதாக உளவியல் ரீதியான நன்மைகளை ஏற்படுத்தும். அதாவது ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருமுகப்படுத்தி தியானம் செய்து மனதின் சக்தியை பெருக்கிக் கொள்ளும். இதன் மூலம் நடந்த - நடந்துகொண்டிருக்கின்ற - நடக்கப்போகும் விடயங்களை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் தன்மை ஏற்படும். மற்றவர்களுக்கு நன்மையான விடயங்களில் ஈடுபட்டு நன்மைகளை சிந்திக்கவும் செய்யவும் முற்படுவீர்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும் அமைதியோடும் சந்தோஷத்தோடும் வாழ இக்கலை உதவிபுரியும். யோகக் கலையை ஒழுங்காகவும் உறுதியாகவும் நம்பிக்கையுடன் நிதானமாக அவசரப்படாமல் செய்து வந்தால் நீங்கள் எதை நினைத்துச் செய்கிறீர்களோ அது உங்களுக்கு கிடைக்கும்.

தீமைகள் என்றால் எதுவுமில்லை. ஆசனங்களை முறைப்படி ஒரு சிறந்த ஆசிரியரிடம் பயிலவேண்டும். அப்படியல்லாது தாங்களே செய்ய முற்படும்போது பாரதூரமான விளைவுகள் சில ஆசனங்களால் உடலுக்கு ஏற்பட வாய்ப்புண்டு.

நவஜோதி : யோகக் கலையை எந்த வயதில் கற்பது சிறந்தது என நினைக்கிறீர்கள்?

ஜெயானி: சிறு வயதிலே கற்பதுதான சிறப்பானது. ஏனென்றால் சிறுவர்களின் மனம் எப்போதும் மகிழ்ச்சியாக கவலைகள் அற்ற, விழிப்பான மன நிலையில் இருக்கும். இதன் காரணமாகத்தான் அவர்களால் எதையும் கிரகித்துக் கற்றுக் கொள்ளும் தன்மை அதிகமாக உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஒரு இடத்திலே இருந்து ஆசனங்களை செய்யப் பழகுவதால் மன ஒருமைப்பாடு, அமைதி, மூளை வளர்ச்சி என்பன ஏற்படும். சுறு சுறுப்புடன் சோம்பல் அதிக நித்திரை ஒழிந்து உற்சாகத்தோடு காணப்படுவார்கள். இதன் விளைவாக மனம் இன்னும் விழிப்படைந்து நிறைய விஷயங்களைக் கற்றுத் தேறும் வல்லமை பெறுவார்கள். சக மாணவர்களின் போட்டி மனப்பான்மை, பயமுறுத்தல், குடிவகை, புகைப்பிடித்தல், போதைவஸ்து, பெண்களின் சகவாசம் ஆகிய தீய பழக்கங்களை பழகிக்கொள்ளாமல் அவற்றை அறிந்து விலகும் தன்மையைப் பெறுவார்கள். தங்களிடமுள்ள திறமைகளைக் கண்டறிந்து அதி புத்திசாலிகளாக வாழ்க்கையை வெல்லும் மந்திரத்தை அறிந்து வெற்றி கொள்ள முயற்சிப்பார்கள்.

நேர்மறை எண்ணங்களான அன்பு, பகிர்தல், பிறர்நேசம், சந்தோஷம், அமைதி, உற்சாகம் போன்ற நற்பண்புகள் உள்ளவர்களாக காணப்படுவார்கள். உடல் ரீதியான பிரச்சனைகளான இரவில் சிறுநீர் கழித்தல், பயங்கரக் கனவு, அதிகமான, குறைவான எடை உடையவர்களாக இருத்தல் ஆகியவற்றிலிருந்து விடுபடுவார்கள். யோகக் கலையைப் பழகுவதால் தனக்கும் பிறருக்கும் தீங்கு விளைவிக்காத ஒரு மனிதனை உருவாக்க முடியும் என்பது நிச்சயம்.

*நவஜோதி : அப்படியாயின் யோகக்கலை பற்றிய முன்னெச்சரிக்கைகளை விளக்குவீர்களா?*

ஜெயானி : யோகாசனம் செய்யு முன் வயிறு சுத்தமாக்கப்படல் வேண்டும். மலச்சிக்கல் உடையவராயின் இரண்டு அல்லது மூன்று கோப்பை நீரில் கொஞ்சம் உப்புச் சேர்த்து அருந்தி ஒவ்வொருநாளும் குறிப்பிட்ட ஒரு நேரத்திற்கு மலம் கழிக்க முயற்சி செய்தால் இதிலிருந்து விடுபடலாம். உணவு உண்டு நான்கு மணித்தியாலங்களின் பின்பும் தேநீர், கோப்பி, பழரசம் ஏதாவது அருந்தினால் அரை மணித்தியாலத்தின் பின்பும் யோகாசனம் செய்யலாம்.

ஆசனங்கள் செய்வதற்கு மொத்தமான துணி, கம்பளி, அல்லது பாய் விரித்து அதில் அமர்ந்து அமைதியான, சுத்தமான, காற்றோட்டமான இடத்தில் செய்யலாம். ஆரம்பத்தில் ஆசனங்களை செய்யும்போது உடலை வருத்தலாகாது. ஆசனங்கள் பிராணாயமம், சவாஷ்லம் என்ற ஒழுங்கில் யோகக்கலையைப் பயில வேண்டும். ஆசனங்களை செய்யும்போது நிறம் குறைந்த இறுக்கமில்லாத உடைகளே அணியவேண்டும். மிதமான சுடுநீரில் உடலைக் கழுவிய பின்பே ஆசனங்கள் செய்ய வேண்டும். ஆசனங்களைச் செய்வதற்கு மௌனம் அவசியம். பேசுவதோ வேறு சிந்தனையோ கூடாது. கருத்தோடு கவனமாகச் செய்யவேண்டும்.

நார்ச்சத்து மிகுந்த உணவுகளை உட்கொள்ளலாம். பெண்கள் மாதவிடாய் தினங்களிலும் கருத்தரித்த காலங்களில் நான்கு மாதங்களுக்கு ஆசனங்களைத் தவிர்க்க வேண்டும்.

உடல் உறவு கொண்டால் நான்கு மணித்தியாலங்களின் பின்பே ஆசனங்கள் செய்ய வேண்டும். ஆறு மணிநேர ஆழ்ந்த உறக்கம் அவசியம். அளவுக்கதிகமான உடல்களைப்பு, உடல் வேலை செய்தால் ஆசனங்களைத் தவிப்பது நல்லது.

*நவஜோதி: குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை யோகாசனத்தின் மூலம் தீர்க்க முடியுமா ?*

ஜெயானி : பிரச்சனைகளை இனங்கண்டு நிச்சயமாகத் தீர்க்க முடியும். கோபம் படபடப்புக் குறைவதற்கு "ஷஷாங்காசனம்" என்னும் ஆசனத்தின் மூலம். நல்ல பலனைப் பெற முடியும். எனவே கோபத்தைக் குறைத்து அதற்குத் தீர்வு கண்டு கொள்ளும் இலகுவான மனநிலை உருவாகும். நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களிலும் நேர்மறைநிலை (Positive) எதிர்மறைநிலை (Negative) களை அறிந்து அதில் நேர்மறை நிலைகளை மட்டும் கண்டுகொள்கின்ற தன்மை ஏற்படும். இதனால் கவலை, பயம், அழுகை, தாழ்வுமனப்பான்மை ஆகியவற்றிலிருந்து விடுபட்டு எப்போதும் சந்தோஷத்தோடும் சாந்தியோடும் இருப்பதை உணருவீர்கள்.

*நவஜோதி: யோகாசனம் செய்வதற்கு ஏதாவது வயது எல்லை இருக்கிறதா?*



ஜெயானியின் கணவர் நிர்மலன்

ஜெயானி: ஆண், பெண் யாவரும் அவரவரின் உடல் நிக்கு ஏற்ப எந்த வயதிலும் செய்யலாம். குழந்தை பிறந்த ஆறு மாதங்களின் பின் ஆசனங்களைத் தொடங்கலாம்.

*நவஜோதி: கொடிய நோய்களான புற்றுநோய், இருதயநோய், நீரிழிவுநோய், சுவாசப்பை சம்பந்தமான நோய்கள், தோல் நோய்கள், வாதம், மற்றும் பெண்களின் கருப்பை சம்பந்தமான நோய்களை இந்த யோகாசனத்தின் மூலம் குணப்படுத்த முடியுமா?*

ஜெயானி: நிச்சயமாகக் குணப்படுத்த முடியும். நோய் குணமாகும் என்ற நம்பிக்கையும் ஆசனங்களைச் சொல்லித்தருபவரின் மேல் உள்ள நம்பிக்கையும் ஆசனங்கங்களைச் செய்வதில் முயற்சியுமே மேற்கூறப்பட்ட நோய்களிலிருந்து நிச்சயமாக விடுபட உதவும். நோயாளியின் உடல்நிலைக்கு ஏற்ப ஆசனங்களைச் செய்து குணம் பெற வேண்டும். அத்தோடு பக்க விளைவுகள் அற்ற ஒரு குணப்படுத்தல் முறையே யோகக்கலையாகும்.

*நவஜோதி : எத்தனை மணிநேரம் யோகாசனம் செய்ய வேண்டும்?*

ஜெயானி: ஒரே நாளில் இரண்டு பிரிவாக ஆசனங்களைப் பிரித்துச் செய்வதானால் எட்டு மணித்தியால இடைவெளி இருத்தல் அவசியம். கோடை காலங்களில் 35 நிமிடமும் குளிர் காலங்களில் 45 நிமிடங்களும் ஆசனங்களைச் செய்யலாம்.

**அடுத்த இதழில் மற்றுமொருவருடன் சந்திப்போம்.**

# HARTEX

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

- COMBAT
- PULLOVERS
- MAP CASES
- THERMAL UNDERWEAR
- RAINWEAR
- BODY WARMERS
- SHORTS
- COMPRESSORS BAGS
- CLOTHING
- BOOTS
- COOKWARE
- MONEY BELTS
- HIKING BOOTS
- HAMMOCKS
- CUTLERY SETS
- GLOVES
- PLATES
- WEBBING
- HEADWEAR
- HIKING BOOTS



Competitive prices

55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244



321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

## J & J WINES LTD

WHOLESALERS OF WINES, BEERS, SPIRITS, TOBACCO GROCERIES, TOILETRIES AND MANY MORE!

GREAT VALUE FOR MONEY! EXCELLENT CUSTOMER SERVICE! EXCEPTIONAL QUALITY!

OPENING TIMES:

MON-FRI: 7AM-8PM SAT-7AM-5PM SUN-8AM-4PM

FIND US AT-

J & J WINES LTD, 10 BOEING WAY, INTERNATIONAL TRADING ESTATE, BRENT ROAD, SOUTHALL, MIDDLESEX, UB2 5LB TEL: 020 8867 9595 FAX: 020 8867 9795

## TMC Wholesale

We gurrantee to beat all other wholesalers and cash & carry prices

Hardware, Stationery, Household, D.I.Y, Electrical, Kitchenware

1,000's of £1.00 lines in stock - strictly wholesale

Tel: 020 8803 5678 Fax: 020 8803 5656

Unit 5 H Nobel Road, Eley Estate, Edmonton, London, N18 3BH

Opening Hours: Mon - Fri 9.00am - 7pm Sun 9.00am - 2.00pm

E.mail: tmcwholesale@hotmail.com

## London Airport Taxi Service

0870 042 8886 BAtransfer.COM

Transfers To and From All London Airports to Anywhere in UK

£2.00 Off PER JOURNEY WHEN YOU HAND OVER THIS VOUCHER TO DRIVER

விமானநிலையம் செல்லவும் அழைத்து வரவும் அனுபவம் பெற்றவர்கள்.

## J.S. Carpets

Specialists in: All kinds of fittings & suppliers of quality carpets, wood & vinyl flooring

TEL: 020 8578 5959

508-510 Lady Margaret Road, Southall, Middlesex UB1 2NP jscarpets@msn.com

## London School of Management

Secure a brighter future with a Degree
Bachelor and Masters Degree Programmes
Commencing April 2007
at

London School of Management

43-47 New Broadway, Ealing, London, W5 5AH

Call 0208 567 4355 or email:admin@lsm.ac.uk for more details or visit our website

www.lsm.ac.uk

## To Advertise 07957681944

## Morjarias Toys & Gifts



Xmas Wrap
Xmas Cards
Stationery
Soft Toys
Murtis
Tools – Hardware
Rizla – Duracell
Toiletries
Photo Frames

Party Goods
Household Items
Candles - Giftware
Panasonic Batteries
Pocket Money Toys
Helium Balloons
£ - Pound Lines - £



Trade Only

Morjarias House
North Circular Road
London NW10 7UD
☎ 0870 333 6898
www.toysgifts.biz

| Opening Times | | | |
|---|---|---|---|
| Mon to Fri | 10am | - | 6pm |
| Late Night Thur | 10am | - | 8pm |
| Saturday | 9am | - | Midday |
| Sunday | 9am | - | 3pm |

## IDEAL GLAZING

WITH OVER 20 YEARS EXPERIENCE

Manufacturers & Installers of uPVC and Aluminium



FOR FREE ESTIMATE CALL

020 8574 8342

Fax: 020 8843 1903

IDEAL GLAZING (EURO) LTD
29 The Green, Southall
Middlesex, UB2 4AN

## furniture essentials

Quick & Simple Living Solutions...

Sofas, Sofabeds & Dining Furniture

EXTRA 10% off our Current Sale Prices with this Advert.

13 Brentside Works, North Cicular Rd
Wembley NW10 7SX
Call: 020 8965 8588

## J K SHAH

J.K. Shah (B.A.Hons) F.C.C.A

Chartered Certified Accountant
Accountants, Tax and Business Advisers
Complete Accounting Services

ACCOUNTANCY
Accounts prepared for Sole Traders, Partnerships & Limited Companies

TAXATION
All kinds of taxation matters

VAT & BOOK-KEEPING
Competitive Book-keeping and VAT Service. Using Computerised System

PAYROLL
Comprehensive Computerised Payroll Services

ACCA

572-574 Romford Road, Manor Park, London E12 5AF
Tel: 020 8553 2436 Fax: 020 8514 6939
E-mail: info@jkshah.com
Internet: www.jkshah.com



## CARRARA

the choice for natural stone

- Manufacturers of kitchen worktops and bathroom finishes
- Largest selection of stone slabs & tiles
- Fitting 7 days from templating
- Trade & general public welcome

45-47 Standard Road
London NW10 6HF

T 020 8838 4604
F 020 8838 4603
www.carraramarble.co.uk

## NW. Constructions Ltd

- Extension
- Conservatory
- Loft Conversion
- Plastering
- Kitchen
- Bathroom
- Heating
- Skimming
- All General Building Work Undertaken
- Free Estimate



Office: 020 8561 9284
Fax: 020 8573 1731
nwconstt@yahoo.co.uk
OVER 15 YEARS EXPERIENCE

## Saratha JEWELLERS

MODERN DESIGNS - EXCLUSIVE COLLECTION
ANTIQUE STYLE - CRAFTED JEWELLERY

22ct gold specialist

saratha - A name well known for creativity & innovation



105 Ilford Lane, Ilford, Essex 1G1 2RJ
Tel: 020 8514 3072

## To Advertise 020 8952 5677

## MANUFACTURING LTD

T:020 8571 0043/020 8574 2571 F:020 8843 0746
220 Uxbridge Road, Southhall, Middx UB1 3DZ

mbs

-Durable-Unbeatable Price-Free Design & Delivery-5 Years Guarantee-All Units Made from 18mm

Heating & Plumbing supplies, Bathroom Showers & Sanitary Ware, Fittied Kitchens, Bedroom Furniture, Marble & Granite Floors, Worktops, Tiles & Other Products

e-mail: mbsmanufacturing@btconnext.com
mbsgroupcompanies.com